விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
## Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 13 வெள்ளிக்கிழமை (26.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 128

# வடக்கு இராணுவ அடாவடியை ஐ. தே. க. எதிர்க்க வேண்டும்!

## ரணிலிடம் கோரினார் சுரேஷ்



(யாழ்ப்பாணம்) வடக்கில் இராணுவம் நடத்தும் அடக்குமுறைகளையும் அடாவடித்தனங்களையும் முடிபுக்குக் கொண்டுவர ஐக்கிய தேசியக்கட்சி முன்வர வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு நேற்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர்கள்வருகை தந்தனர்.

இதன்போது யாழில் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் வலி., கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் அ.உதயகுமார் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

மக்களுடைய காணிகள் சுவீகரிக்கப்பட்டுவரும் இந்நிலையில் தமிழ் மக்களுடைய இன்றைய தேவை (19ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை விவகாரங்களால் இலங்கை அரசுக்கு சிக்கல்!

## வியட்நாம் பிரதமரிடம் ஹக்கீம் பேச்சு

(நியூயோர்க்) ஜெனீவாவில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக கொண்டு வரப்பட்ட மனித உரிமை மீறல் சம்பந்ததமான தீர்மானங்கள் இலங்கையை ஐ.நா. பொதுச் சபையிலும், பாதுகாப்புச் சபையிலும் சிக்கலுக்கும், இக்கட்டானநிலைமைக்கும் உள்ளாக்கும் நோக்கத்திலேயே கொண்டு வரப்பட்டதாக ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அமைச்சர் ஹக்கீம் – வியட்நாம் பிரதமர் நகுயென்டான் டுங் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு வியட்நாம் பிரதமரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போதே அவர் (20ஆம் பக்கம் பார்க்க)

# பொதுநலவாய மாநாடு இலங்கையில் வேண்டாம்!

## சர்வதேச மனித உரிமை அமைப்பு கோரிக்கை

**(லண்டன்) பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்தாது வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று சர்வதேச மனித உரிமை அமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெற்றால், அந்த நாட்டில் நடந்த மனித உரிமை மீறல்களை சர்வதேச சமுதாயம் அங்கீகரித்ததாகிவிடும் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் மேம்பட அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத நிலையில், அங்கு நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் மாநாடு நடத்தப்பட்டால், பொதுநலவாய அமைப்பு சர்வதேச (19ஆம் பக்கம் பார்க்க)

## எந்தவொரு முடிபும் எடுக்கவில்லை—டக்ளஸ்

(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாண சபைத்தேர்தலில் தனித்து போட்டியிடுவதா? அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புடன்இணைந்து போட்டியிடுவதா? என்பது குறித்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) இதுவரைஎந்தவொருமுடிபினையும் எடுக்கவில்லை என அக்கட்சியின் செயலாளர்நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில்நேற்று இட (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குத் தேர்தலில் தயா மாஸ்டர்!

(யாழ்ப்பாணம்) விடுதலைப் புலிகளின் முன்னாள் ஊடகத் துறைப் பேச்சாளராகிய தயா மாஸ்டர் (வேலாயுதம் தயாநிதி வடமாகாண சபைக்கான தேர்தலில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தம்முடன் இரண்டு தரப்பினர் தொடர்பு கொண்டு கேட்டுள்ளதாகவும், தேர்தலில் போட்டியிடுவதற்குத்தான் விருப் (20ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கவினருக்கு அனுமதி மறுப்பு



(யாழ்ப்பாணம்) வலிகாமம் பகுதியில் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளைச்சென்று பார்வையிட முற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் செல்லவிடாது இராணு வத்தினரால் தடுக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலிகாமம் உயர்பாதுகாப்பு வலயத்திற்கு மாலை 6 மணியளவில் சென்றிருந்தனர்.

இதன்போது இராணுவத்தினரால் உட்செல்ல அனுமதி மறுக்கப்பட்டதோடு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் வந்தால் உட்செல்ல அனுமதி வழங்குவதாகவும் அங்கு இருந்த இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இதனையடுத்து ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உயர் பாதுகாப்பு வலயத்திகுள் செல்லாமல் திரும்பிச் சென்றுவிட்டனர். (செ–6)

# ஊடகங்கள் இலங்கையை 'கொலைக் களமாக சித்தரித்தன!

## குமுறுகிறார் ஹெகலிய



(கொழும்பு) பயங்கரவாதத்திலிருந்துநாட்டை முழுமையாக விடுவிப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கைகளை சர்வதேச ஊடகங்கள் கொலைக் களமாக சித்தரித்தமை மிகப்பெரிய தவறு என ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

மோதல் தீர்வே தவிர யுத்தமல்ல. எந்த நாட்டிலும் இவ்வாறான மோதல் தீர்வில் ஊடகங்களின் பங்களிப்பு மிக முக் (20ஆம் பக்கம் பார்க்க)

# வடக்குத் தேர்தல் நேர்மை பெற சர்வதேச கண்காணிப்பு அவசியம்

## யாழ். வந்த ரணில் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாண சபைத் தேர் தலுக்கு முன்பாக சிவில் சமூகம் சார்ந்த ஒருவரை நியமிப்பதோடு சர்வதேச கண்காணிப்புடன் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வேண்டு கோள் விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, அக்கட்சியின் பொதுச்செயலாளர்நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க உள்ளிட்ட அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான டி.எம்.சுவாமிநாதன், ரவிகருணாநாயக்க உள்ளிட்டவர்கள் வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணத்திற்கு (20ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு பெண்களைக் காணவில்லை; சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு

(சுன்னாகம்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பதின்ம வயதுச் சிறுமி உட்பட இரண்டு பெண்கள் காணாமல் போயுள்ளதாக நேற்று சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் கோட்டைக்காட்டு பகுதியில் உள்ள 16 வயதான மாணவி ஒருவர் வீட்டில் ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து வீட்டில் இருந்து வெளிச்சென்றவர் திரும்பிவரவில்லை என முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை சுன்னாகம் காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த 26 வயதான பெண் ஒருவர் கடிதம் எழுதி வைத்துவிட்டு காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்கள் சம்பந்தமான விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-6)

# வன்னி பிரஜைகள் குழு இணையம் அமெரிக்க பிரதிநிதிகளுடன் சந்திப்பு



வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான வெளிநாட்டு சிறப்புப் பிரதிநிதி லெஸ்பீ ரெயிலர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் 24 ஆம் திகதி மாலை வவுனியாவில் மன்னார், வவுனியா,முல்லைத்தீவு மாவட்டப் பிரஜைகள் குழுக்களின் பிரதிநிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

விருந்தினர் விடுதியொன்றில் நடைபெற்ற இச்சந்திப்பில் வடக்கு,கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாக அமெரிக்கப் பிரதிநிதிகள் விரிவாகக் கேட்டறிந்துகொண்டனர்.

குறிப்பாக வன்னியிலுள்ள தமிழ் மக்களின் இன்றைய வாழ்வியல் நிலைமைகள் பற்றி அவர்கள் மிக ஆர்வமாக கேட்டறிந்து கொண்டதாக சந்திப்பில் கலந்து கொண்ட பிரஜைகள் குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

யுத்தத்திற்குப் பின்னரான இக்காலப் பகுதியில் வடக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாக அமெரிக்கப் பிரதிநிதிகளிடம் பிரஜைகள் குழுவினர் விரிவாக எடுத்துக் கூறினர்.

வடக்கு,கிழக்குப் பிரதேசங்களில் பாதுகாப்பு, அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் நாளுக்குநாள் அபகரிக்கப்படுவதையும் அரசாங்கத்தின் புதிய காணிக்கொள்கையானது வடக்கு,கிழக்கிலுள்ள இரு சிறுபான்மை இனங்களுக்கிடையில் இனவிரிசலை ஏற்படுத்தும் வகையில் இருப்பதையும் சுட்டிக்காட்டினர்.

வடக்கில் தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் முழுமையாக நடைபெற்று முடியும் முன்னரே அவர்களின் பூர்வீக வாழ்விடங்கள் அரசாங்கத்தினதும் இராணுவத்தினரதும் தேவைகளுக்காக பறிக்கப்பட்டு வருகின்றன.

மீள்குடியேறியுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகள் இன்னமும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

அவர்களின் சொந்தக் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படாமையால் இன்றும் தமது தாய்நாட்டில் அகதி வாழ்க்கையே வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக தமிழ் மக்கள் இப்போது பாதுகாப்பற்ற சூழலுக்குள் இருப்பதாக உணர்கின்றனர்.

நாட்டின் அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் மக்களின் வாழ்விடங்கள் பறிப்புத் தொடர்கிறது. இதனை சர்வதேசம் தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும். நிரந்தர தீர்வு கிடைக்கும் என எதிர்பார்த்துக் காத்திருக்கும் தமிழ் மக்கள் அத்தீர்வு என்ன என்பது தெரியாமலேயே தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருகின்றனர். எனவே சர்வதேசம் தமிழர்களின் வாழ்வுரிமைப் பிரச்சினையில் தலையிட்டு ஒரு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் என அமெரிக்கப் பிரதிநிதிகளிடம் பிரஜைகள் குழு கோரிக்கை விடுத்தது.

இலங்கையில் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண சர்வதேசம் குறிப்பாக அமெரிக்கா விரைந்து செயற்பட வேண்டும் என பிரஜைகள் குழுக்கள் வலியுறுத்தின.

இச்சந்திப்பில் மனித உரிமை ஆர்வலர் சண் மாஸ்டர், மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் அருட்தந்தை செபமாலை அடிகளார், செயலாளரும் சிரேஷ்ட எழுத்தாளருமான சிந்தாத் துரை, வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் டாக்டர் சத்திய மூர்த்தி, செயலாளர் சுந்தரம், திட்ட இணைப்பாளர் குமாரகுலசிங்கம், முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் ரவிகரன், பொருளாளர் இளங்குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (செ)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் சிற்றம்பலம் கந்தப்பு

28.03.2013 அன்று சிவபதமடைந்த சிற்றம்பலம் கந்தப்பு அவர்களின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட, துயர் பகிர்ந்த, உதவிகள் நல்கிய உள்ளங்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், 27.04.2013 சனிக்கிழமை அன்னார் இல்லத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-3111)

நந்தனம்,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

இங்ஙனம்:
ஆ.சிவசுவாமி-மருமகன்
குடும்பத்தினர் சார்பாக

## தேவை

யாழில் இயங்கும்பிரபலசோடாக் கம்பனிக்கு சோடாப் பெட்டி ஏற்றி இறக்க ஆட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நேரில் வரவும்.

பிள்ளையார் இன் ஹோட்டல்
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி-3096)

## மரண அறிவித்தல்

### சரவணை வல்லிபுரம் சற்குணநாதன்

(ஓய்வுபெற்ற கட்டுநாயக்கா விமான நிலைய பிரதான பொறியியலாளர், ஓய்வூதியச் சங்க செயலாளர்)



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட சரவணை வல்லிபுரம் சற்குணநாதன் என்பவர் 25.04.2013 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் தயாநாயகியின் அன்புக் கணவரும் தனுஷா (லண்டன் M.A.) கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.04.2013 இன்று காலை 11 மணியளவில் அன்னாரில் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

தொ.பே: 0779589753 (2461)

### யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

இன்று முதல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

### பணிப் பெண் தேவை

கைதடியில் வீட்டு வேலைக்கு பணிப் பெண் தேவை.

தொடர்புக்கு: 0772224913 (2455)

## வாடகைக்கு

யாழில் தொழில் புரிபவர்களுக்கு மாதாந்த வாடகை அடிப்படையிலான அறை வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:-
பிள்ளையார் இன் ஹோட்டல்
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி-3097)


### முகவராண்மையின் அடிப்படைத் தத்துவங்கள்

"முதல்வரையும் மூன்றாம் நபரையும் விடயம் ஒன்றினை நிறைவேற்றுவது தொடர்பான ஒப்பந்த உறவுகளில் முதல்வர் சார்பாக இணைக்கும் ஆள் ஒருவருக்கும் முதல்வருக்கு மிடையில் ஏற்படும் பிரதிநித்துவ ஒப்பந்த உறவுமுறையே முகவராண்மை எனப்படும்"

"முகவராண்மை" என்பது ஒரு ஒப்பந்தத்திலிருந்து உதயமாகும் இன்னொரு பிரதிநித்துவ ஒப்பந்தமாகும். முகவராண்மையில் இரண்டு வகையான ஒப்பந்தம் உருவாகுதல் தவிர்க்கப்பட முடியாத தொன்றாகும்.

1. முதல்வருக்கும் மூன்றாம் நபருக்குமிடையில்
2. முதல்வருக்கும் முகவருக்குமிடையிலான பிரதிநித்துவ ஒப்பந்த உறவு

முதல்வரின் கட்டுப்பாட்டுக்குட்பட செயற்படும் அதிகாரம் உடையவரே முகவர் என்பது, அவசிய தேவைக்கான முகவராண் மையைப் பொறுத்த வரையில் எந்த வகையிலும் பொருத்த மற்றதாகவே காணப்படுகிறது.

மறைந்த ஈழத்துக் காந்தி
எஸ்.ஜே.வி.செல்வநாயகத்திற்கு
என் சமர்ப்பணம்

இ.சோதிநாதன் LL.B (col)
பகுதிநேர விரிவுரையாளர்
கூட்டுறவு பயிற்சிக் கலாசாலை
வீரசிங்கம் கட்டடம்
யாழ்ப்பாணம்.

(2462)


## 1-வது பிறந்த தின வாழ்த்து

26.04.2013 வெள்ளிக்கிழமை இன்றைய தினம் தனது 1-வது பிறந்த தினத்தைக் கொண்டாடும் இல.94/16 பரமானந்த விகார மாவத்தை கொட்டாஞ்சேனை கொழும்பைச்சேர்ந்த உதயகுமாரன் - டிலானி தம்பதியரின் புதல்வியும் எமது அன்பு நண்பி லீனா அவர்களின் சகோதரியுமான

**செல்வி உ.எமிமிஷெல்வ்**

அவர்கள் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல பிள்ளையார், கொட்டேனா மாரியம்மனை வேண்டி வாழ்த்தும் அன்பு நண்பர்கள்: லோஜினி, நிரோஷினி, துளசி, பிரணவன், டிஷாந், ஹசுன், கஜானா.

அன்புடன்: ப.கஜானா
மட்டக்களப்பு பல்கலைக்கழகம்

(2436)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### தொண்டு

ஒரு ஊரிலே பாதிரியார் ஒருவர் இருந்தார்.

அவர் ஒருநாள் மடத்தில் உள்ள சமையல் அறையில் பாத்திரங்களைக் கழுவி சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார். அச்சமயம் ஒரு தேவதூதன் அவர் முன்னால் வந்து நின்று,

"ஆண்டவர் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார். பரலோகத்திலே வாசம் செய்வதற்கு உங்களுக்கு நேரம் வந்து விட்டது" என்று கூறினார்.

"ஆண்டவருக்கு என்னுடைய ஞாபகம் வந்ததற்கு நன்றி. ஆனாலும் இப்போது இங்கே நீயே பார்... எவ்வளவு மட்பாண்டங்கள் சுத்தப்படுத்துவதற்கு உள்ளன. இவ்வளவையும் நான் சுத்தப்படுத்த வேண்டும். இந்தப் பணியை முடிக்கும் வரைக்கும் என் பரலோக வாழ்வைத்தள்ளி வைக்க முடியுமா?" என்று கேள்வி எழுப்பினார்.

தேவதூதன் தனக்குரித்தான விவேகத்தோடு, அன்பாக பாதிரியாரைப் பார்த்தான்.

"சரி... என்ன செய்யலாம் என்பதை பின்னர் சொல்கிறேன்" என்று கூறி விட்டு புறப்பட்டு போய் விட்டான்.

இன்னொரு நாள்... வைத்தியசாலையிலே நோயாளிகளைக் கவனிக்கிற வேலையிலே ஈடுபட்டிருந்தார் அந்தப் பாதிரியார். ஒரு நோயாளியின் தாகத்திற்கு தண்ணீர் கொடுத்துவிட்டு நிமிர்ந்து பார்த்த போது, தேவதூதன் மறுபடியும் அவர் முன்னால் தோன்றினார்.

இந்தத் தடவை பாதிரியார் தன்னலமற்றவராக, பேரன்பைக் காட்டக்கூடிய வகையிலே தன்னுடைய இரு கைகளையும் உயர்த்திய படி தேவதூதனின் கவனத்தை பிணியால் வாடிய நோயாளிகளின் பக்கம் திருப்பினார்.

தேவதூதன் எதுவுமே கூறவில்லை. தன்னை மறைத்துக் கொண்டார். பின்னர் தனது மடத்திற்கு சென்று அறையினுள் இளைப்பாறினார். சற்று யோசித்துப் பார்த்தார். தேவதூதனையும் அவரது விருப்பத்தையும் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்ததையும் நினைத்துப் பார்த்தார். திடீரென தான் முதுமை அடைவதையும் சோர்வடைவதையும் உணர்ந்தார். மறுபடியும் ஆண்டவரை நினைத்து "கடவுளே! உம்முடைய தூதனை மறுபடியும் என்னிடம் அனுப்பினால், நான் அவரை சந்திப்பதற்கு ஆவலாக இருக்கிறேன்" – என்று கூறுவதற்கு முன்பாகவே தேவதூதன் அவர் அருகில் வந்து நின்றான்.

பாதிரியார் நிமிர்ந்து பார்த்தார்.

"நீங்கள் இப்போதே என்னை அழைத்தால், நான் பரலோகம் வரத் தயார்" என்று கூறினார்.

தேவதூதன் மறுபடியும் பாதிரியாரை அன்போடும் விவேகத்தோடும் பார்த்தார்.

"நீங்கள் இதுவரைக்கும் வேறு எங்கேயோ இருந்ததாக நினைக்கிறீர்கள். தொண்டு செய்வதைவிட பெரிய காரியம் வேறு எதுவுமே இருக்க முடியாது.

ஆனால், இந்தக் காலத்திலே நாம் தொண்டு செய்கிறோம் என்று நினைத்து, ஏதாவது செய்ய ஆரம்பித்தால் கூட அதை ஒரு மாதிரியாக சுற்றி நின்று வேடிக்கை பார்க்கும் கூட்டம்தான் அதிகம் காணப்படுகிறது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமான நாடல்ல

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா

இலங்கையின் மகா சிங்கள பௌத்தர்கள் எனக் கூறிக் கொள்ளும் ஒரு சிறிய தரப்பினர் மிகவும் ஆபத்தானவர்கள். சிறிய தரப்பினரான இவர்களின் அடிப்படைவாத செயல்கள் தற்போது தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளதாக முன் னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மத்துகம பட்டபுல்ல கந்த பௌத்த மத்திய நிலையத்தில் தெற்காசியாவிலேயே உயரமான புத்தர் சிலையை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த 22 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இரண்டாயிரத்து 500 வருட இலங்கை வரலாற்றில் நாட்டை ஆட்சி செய்த மன்னர்கள் எப்போதும் இலங்கையை சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமான நாடு எனக் கூறியதில்லை. அவர்கள் வேறுநாடுகளிடம் இருந்து மக்களை பாதுகாத்துக் கொள்ளவே போரிட்டனர்.

இனவாதத்தில் போதை ஏறி நாட்டில் உள்ள ஏனைய இனங்களையும் மத தலங்களை தாக்கவில்லை.

அடிப்படை வாதிகள் எழுச்சி பெறும் சந்தர்ப்பங்களில் அரசாங்கம் தலையிட்டு அவர்களை அடக்க வேண்டும். இது அரசாங்கத்தினதும் ஆட்சியாளர்களினதும் பொறுப்பு. இதனை விடுத்து அவர்களுக்கு ஆதரவு கொடுக்கும் கொள்கையை பின்பற்றினால் பாரிய அழிவே ஏற்படும்.

தற்போது மேற் கொள்ளப்பட்டு வரும் இந்த நடவடிக்கையினால் ஏற்பட்டு வரும் பாதிப்பு அளப்பெரியது. ஏற்கனவே பொருளாதார மற்றும் சர்வதேச ரீதியில் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் போல் பௌத்தர்களும் நாட்டு மக்கள் என்ற வகையில் அவர்களுக்கு உரிமைகளும் கடமைகளும் உள்ளன. எனவே நாம் அந்த கடமையை நிறைவேற்ற வேண்டும்.

(அ-2)

# கிராம சேவகர் தெரிவிற்கான போட்டிப் பரீட்சை 4 ஆம் திகதி

(கொழும்பு) நாடு முழுவதும் காணப்படும் கிராம சேவகர்களுக்கான பதவி வெற்றிடங்களுக்கு போட்டிப் பரீட்சையினூடாக ஆட்களை சேர்ப்பதற்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது. நாடளாவிய ரீதியிலுள்ள 14 ஆயிரம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் உள்ள 4 ஆயிரம் வெற்றிடங்களிற்கே மேற்படி போட்டிப் பரீட்சையினூடாக கிராம சேவகர்கள் நியமிக்கப்படவுள்ளனர். மேலும் குறித்த வெற்றிடம் காணப்படுகின்ற கிராமசேவகர் பிரிவுகளுக்கான பணிகளை தற்போது சேவையிலுள்ள கிராம சேவகர்கள் தங்களது பணிகளுக்கு மேலதிகமாக மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலைகளைக் கருத்திற் கொண்டே போட்டிப்பரீட்சைகளை நடத்தி குறித்த வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி. ஜே. செனவிரத்னவின் பணிப்புரைக்கமைய கடந்த வருடம் இப்பதவி வெற்றிடத்துக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இதையடுத்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பதாரிகள் மேற்படி பதவி நிலைக்காக விண்ணப்பித்திருந்தனர். இந்நிலையில் இவர்களுக்காக போட்டிப்பரீட்சையை எதிர்வரும் மே மாதம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை கடந்த 2007 ஆம் ஆண்டிற்கு பின்னர் போட்டிப்பரீட்சையொன்றினூடாக இந்த ஆண்டிலேயே பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படுவதாகவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70-140 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 50 | 120 | 80 |
| தக்காளி | 60 | 50 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 40 |
| கோவா | 60 | 50 | 80 | 80 |
| கரட் | 150 | 120 | 160 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 50 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 120-170 | 120-150 | 120 |
| பெரிய வெங்காயம் | 70 | 90 | 100 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 160 | 200 | 160 | 100 |
| லீக்ஸ் | 120 | 140 | 160 | 120 |
| பீற்றூட் | 60 | 30 | 80 | 80 |
| கறிமிளகாய் | 100 | 90 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 600 | 400 |
| போஞ்சி | 100 | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80-90 | 60 | -- |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 70 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 45-50 | 45-50 |
| இராசவள்ளி | 100 | 90 | 100 | 100 |

# இராசி பலன்

26.04.2013
(சித்திரை 13, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
பிரதமை பின்னிரவு 12.12 மணிவரை
சுவாதி பிற்பகல் 4.12 மணிவரை
இராகுகாலம் 10.29-11.59 மணிவரை
சுபநேரம் 5.59-7.29 மணிவரை

**மேடம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், காரிய அனுகூலமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், உடல் நலம் சீராகும், கௌரவமான நாள்.

**இடபம்** தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**மிதுனம்** மாமன் மைத்துனர் வழியில் மனதிற்கு இனிய செய்தியொன்று வந்து சேரலாம், பிறருக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடர்வீர்கள்.

**கடகம்** கொடுக்கல் வாங்கல் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், உறவினர் களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சகோதர ஒற்றுமை மேலோங்கும்.

**கன்னி** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், இனிய தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**துலாம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, பயணங்களால் பலன் கிடைக்கும்.

**விருச்சிகம்** தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், பிதா சிந்தனை யுண்டு, சஞ்சலங்கள் அதிகரிக்கும், அமைதிக்காக ஆலயத்தை நோக்கி செல்வீர்கள்.

**தனுசு** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்புண்டு, பயணங்கள் கை கூடுவதற்கான வாய்ப்புண்டு.

**மகரம்** எண்ணிய காரியம் எளிதில் நிறைவேறும், கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களால் நன்மையுண்டு, எதிர்பாராத விதத்தில் சிலரின் உதவிகள் கிடைக்கலாம், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்** தொலைபேசி வழித் தகவல்கள் மனக்குழப்பத்தை அகற்றும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வார்கள், விருந்தினர் வருகையுண்டு.

**மீனம்** பிறருடைய வேலைகளை நீங்கள் எடுத்து செய்யும் சூழ்நிலை உருவாகும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட 10 வீதிகளை புனரமைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட 10 உள்ளூர் வீதிகளுக்கு காப்பெற் இடப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் இந்த மாதத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் சபையின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யாழ் மாநகர சபைக்குட்பட்ட 10 உள்ளூர் வீதிகளுக்கு காப்பெற் இடுவதற்கான நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மிகவிரைவில்இந்த வீதிகளுக்கான காப்பெற்றிடும் பணிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதன்படி ஆடியபாதம் வீதி, பிறவுண் வீதி, புங்கன்குளம் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கஸ்தூரியார் வீதி, ஈச்சமோட்டை வீதி, மருதடி வீதி, இராசாவின் தோட்டம் வீதி உள்ளிட்ட இன்னும் இரண்டு வீதிகளுமாக மொத்தம்10 வீதிகள் காப்பெற்றிடப்படவுள்ளன.

ஏற்கெனவே யாழ். மாநகரசபைக்குட்பட்ட பல வீதிகள் காப்பெற்றிடப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.(அ-6)




நன்றி: மிரர்

# வடக்கு மாகாண தேர்தலில் ஐ.தே.க போட்டியிடும்-ரணில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடும் எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க வலி.வடக்கில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் தமிழ் மக்களின் காணி சுவீகரிப்புத் தொடர்பில் கொழும்பிற்கு திரும்பிச் செல்வதற்கு முன்பாக உரிய பதிலளித்து விட்டே செல்வேன் எனவும் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்.வருகை தந்திருந்த அவர் உள்ளிட்ட அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ரவி கருணாநாயக்க, டி.எம்.சுவாமிநாதன் உள்ளிட்டவர்கள் யாழ். ஊடக அமையத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றினை நடத்தியிருந்தனர். இப்பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

இதன் பிரகாரம் தேர்தலை நடத்தியே ஆக வேண்டிய நிலையில் இலங்கை அரசு உள்ளது. இதன்படி எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் தேர்தலை நடத்த வேண்டியது அவசியம். இந்தத் தேர்தல் நேர்மையாக இடம்பெறுவதை உறுதிப்படுத்த பொதுநலவாய நாடுகளினது பிரதிநிதிகள் உள்ளிட்ட சர்வதேச கண்காணிப்பு தேவை எனவும் குறிப்பிட்டார்.

மேலும்வலி.வடக்குவலி.கிழக்கு பகுதிகளில் சுமார் 6 ஆயிரத்து 381 ஏக்கர் நிலப்பரப்பை இராவத்தினர் தமது தேவைகளுக்காக சுவீகரிப்பதாக அறிவித்தல்கள் ஒட்டப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு நேரடியாக பதிலளிக்க மறுத்த அவர் அப்பகுதிக்குச் சென்று பார்வையிடவுள்ளதாகவும் வடக்கை விட்டு அகல முன்னர் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியே செல்வேன் எனவும் தெரி வித்தார்.

முன்னதாக யாழ்ப்பாண ஊடகவியலாளர் மாநாட்டில் சிங்கள மொழியில் அவர் உரையாற்ற முற்படுகையில் அங்கு பிரசன்னமாகியிருந்த சில ஊடகவியலாளர்கள் அதன் தொடர்பிலும் உடன்பாடுகளைத் தெரிவிக்கவில்லை. இதன் பின்னர் அவர் ஆங்கில மொழியில் உரையாற்ற மொழிபெயர்ப்பும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# வேம்படி மயானத்திற்கு கிணறு அமைக்கத் தீர்மானம்

(கரவெட்டி) அல்வாய் பங்குவேம்படி பொது மயானத்திற்கு புதிய கிணறு அமைப்பதற்கு பருத்தித்துறை பிரதேச சபையில் நேற்று முன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அல்வாய் பங்கு வேம்படி பொது மயானத்திற்கு நீண்டகாலமாக கிணறு இன்மையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதாக அப்பகுதி மக்களால் பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது

இதனை அடுத்து பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்த பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச சபைத் தவிசாளர் பூபாலசிங்கம் சஞ்சீவன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது சபையின் எதிர்க் கட்சித் தலைவரால் இக்கோரிக்கை சபையில் முன் வைக்கப்பட்டது

இதனை சபைத் தவிசாளர் மற் றும் உறுப்பினர்கள் அங்கீகரிக்க இத் தீர்மானம் அன்றைய தினம் நிறைவேற்றப்பட்டது.(அ-3-24)

# சிறுவர் சிறுகதை தொகுப்பு நூல் வெளியீடு

யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியர் சி.ராஜினிதேவியின் நிலவும் சுடும் என்னும் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் கல்லூரி அதிபர் க.இ.இராசசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுயுரையினை யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா வழங்கவுள்ளதோடு நூல் அறிமுக உரைகளை யா/புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி அதிபர் இ. இராஜமகேந்திரன் ஆசிரியர் சு. சிவநேசராஜன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இச்சிறுகதைத் தொகுப்பு நூலின் முதற் பிரதியை ஆசிரியர் ம. கணேசானந்தனும், சிறப்பு பிரதியினை ஆசிரியர் திருமதி சு. வெனான்சியஸ்சும் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (அ-5)




# தீர்த்தத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயதிருவிழாவில் இன்று வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவமும் அதைத் தொடர்ந்து பூங்காவனமும் இடம்பெறவுள்ளது. (அ-3)

# கண்காட்சி

உலக புத்தக தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும் கொக்குவில் பொது நூலகத்தில் புதிய நூல்களின் கண்காட்சி நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகியது. இன்று வெள்ளிக்கிழமை வரை காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்புத்தக கண்காட்சியில் கலந்து கொள்ளுமாறு நூலகர் திருமதி பூ. பாலபாஸ்கரன் அறிவித்துள்ளார். (அ-3)

# செயல்நிலை ஆய்வு குறித்த செயலமர்வு

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து உள்ளக பயிற்சிக்காக பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கான செயல் நிலை ஆய்வு தொடர்பான செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வுக்கு சகல உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களும் குறிப்பிட்ட நேரத்திற்கு தவறாது கலந்து கொள்ள வேண்டும் என யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார். (அ)

# ஓய்வூதிய ந.பு.சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச் சங்கத்தின் 22 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் க.கார்த்திகேசுவும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரச சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் செயலாளர் பொ. கமலநாதனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.


பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)



சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் ஆலயத் தேர்த் திருவிழா நேற்று இடம் பெற்றது. இதில் அம்பாள் தேரில் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருவதையும், அடியவர்கள் காவடி எடுத்து வருவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரம சிங்க வடக்கு மாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். இவருடன் அக்கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, டி.எம் சுவாமி நாதன் உள்ளிட்டோரும் வருகை தந்திருந்தனர். அவர்கள் யாழ்.நல்லூர் கோவில் வீதியிலுள்ள யாழ்.கலாசார ஹோட்டலுக்கு விஜயம் செய்து அங்கு (Jaffna Heritage Hotel) இல் மதிய உணவினை பெற்றுக் கொண் டனர்.

# வீடு கட்டும் பணியில் நல்ல முன்னேற்றம்

## இந்தியத் தூதரகம் தெரிவிப்பு

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்திய அரசின் உதவியுடன் நடைபெற்று வரும் தமிழர்களுக்கான வீடுகள் கட்டும் பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அங்குள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. இது குறித்து இலங்கையில் உள்ள இந் நிய தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு ள்ளது. அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட் டிருப்பவை வருமாறு,

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் 40ஆயிரம் வீடுகளைக் கட்ட இந்திய அரசு நிதியுதவி வழங்கியுள்ளது.

இலங்கை அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் இந்த வீடு கட்டும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டன. இந்த வீடு கட்டும் திட்டத்தை கண்காணிப்பு குழு பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பித்தது. அதில் இரண்டாவது கட்ட வீடு கட்டும் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு, பயனாளிகள் தேர்வு ஆகியவை முதலாவது ஆண்டில் திட்டமிடப்பட்டபடி நடந்து வருகிறது என்று பாராட்டுத் தெரிவித்தார்.

மார்ச் மாத இறுதி வரை 228 கோடி இலங்கை ரூபாய் தவணைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. முதல் தவணைத் தொகை 11 ஆயிரத்து 379 பயனாளிகளுக்கு வழங் கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2 ஆவது தவணைத் தொகை 3ஆயிரத்து 448 பயனாளிகளுக்கும் 3ஆவது தவணைத்தொகை 741 பயனாளிகளுக்கும் 4ஆவதுதவணைத்தொகை 18 பயனாளிகளுக்கும் வழங்கப்படும்.

கிழக்கு மாகாணத்தில் இந்த வீடு கட்டும் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது. இதில் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்ட பகுதிகள் கண்டறியப்பட்டு அந்த பகுதிகளில் உள்ள மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் .

குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கும் 4 நிறுவனங்களில் ஐ.நா.வும் ஒன்று. 36 மாத திட்டமான இந்த ஐ.நா குடியிருப்பு திட்டம் 2012 இல் ஆரம்பிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டில் நிறைவடைய இருக்கின்றது. மக்களுக்கு நேர டியாக வீடு வழங்கும் இந்தத்திட்டத்தின் கீழ் 43 ஆயிரம் வீடுகளைப் புதிதாகக் கட்டுதல் மற்றும் சீரமைத்தல் என்பனவற்றுக்கு இந்நிதி வழங் கப்படுகின்றது என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# பிரித்தானிய விசா விண்ணப்ப நடைமுறைகளில் மாற்றம்

ஐக்கிய இராச்சியத்துக்கான விசா விண்ணப்ப முறைமையில் மாற்றம் ஏற்படவுள்ளதாக ஐக்கிய இராச்சியத்தின் கொழும்பு உயர்ஸ்தானிகரத்தின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி முதல் ஐக்கிய இராச்சிய்த்துக்கு செல்ல வேண்டிய விசா விண்ணப்பங்களை இணையத்தளத்திலேயே பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இணையத்தளத்தில் வழங்கப்பட்டுள்ள புள்ளி அடிப்படையிலான் இந்த விண்ணப் பப்படிவத்தை பூர்த்தி செய்து அதன் பிரதியை ஐக்கிய இராச்சியத்தின் விசா மத்திய நிலையம் ஒன்றில் கையளிக்க வேண்டும். இதற்கு https://apply.ukva.homeoffice.gov.uk/iapply.portal என்ற இணைய முகவரிக்குள் பிரவேசிக்குமாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. விண்ணப்பதாரிகளின் தாமத நிலைமைகளை தவிர்க்கும் பொருட்டு இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுவதாக உயர்ஸ்தானிகரம் தெரிவித்துள்ளது. (அ-2)

# முன்னாள் பொலிஸ் ஊடக பேச்சாளருக்கே மிரட்டல்

முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடிக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இனந்தெரியாத நபர்கள் தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்து பிரசாந்த ஜயக் கொடி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர் களுக்கு இவ்வாறு மிரட்டல் விடுத்துள்ளனர். இந்த மிரட்டல் சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரசியல்வாதிகள் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளின் பாதுகாப்புடன் இரத்தினபுரி நகரில் இயங்கி வந்த இரவு நேர களியாட்ட விடுதி மற்றும் கரோக்கே ஒன்றை சுற்றி வளைத்ததன் காரணமாக இவ்வாறு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி நேரடியாகவே இந்த சுற்றி வளைப்பில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. நாளுக்கு நாள் கொலை மிரட்டல் அதிக ரித்துச் செல்வதனால் பொலிஸ்மா அதிபரின் உத்தரவிற்கு அமைய விசேட பாதுகாப்பு வழங் கப்பட்டுள்ளது.

அதிகமாக ஆட்டம் போடாதே; குடும்பத்துடன் கொன்று விடுவோம் என தொலைபேசி மூலம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடிக்கு அச்சுறுத்தல் விடுக் கப்பட்டுள்ளது எனவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# இரட்டைப் படுகொலை விசாரணையை அவதானிக்க நீதிமன்றில் திரண்ட மக்கள்

செங்கலடி தம்பதியர் படுகொலை தொடர்பில் சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்ட மகள் உட்பட நான்கு மாணவர்களையும் மேலும் இரு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவர்கள் நேற்று முன்தினம் ஏறாவூர் சுற்றுலா நீதி மன்ற நீதவான் ரி. கருணாகரன் முன்னிலையில் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களை எதிர்வரும் மே 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டுள்ளார்.

மட்டக்களப்பு செங்கலடியின் பிரபல வர்த்தகரான சிவகுரு ரகு மற்றும் அவரது மனைவி விப்ரா ரகு ஆகியோர் கடந்த ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வீட்டில் கோரமாக கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப் பட்டனர் . இது தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது இரண்டாவது மகளின் காதல் விவகாரமே இதற்கு காரணம் என தெரிய வந்தது . இதனையடுத்து கொல்லப்பட்டவர்களின் மகள் மற்றும் காதலன் உட்பட நான்கு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இரட்டைப்படுகொலை விசாரணைகளை அவதானிப்பதற்காக நூற்றுக்கணக்கான பொதுமக்கள் நீதிமன்ற வளாகத்தை சூழ்ந்திருந்தமையால் நீதிமன்ற வளாகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>உயரம்: 5'3"<br>கி.பா: 11.5, 4இல் செவ்<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: B -1679 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>உயரம்: 5'2"<br>கி.பா:90, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: O/L<br>தொ.இ: G -1698 |
| பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'10"<br>கி.பா: 39, 12 இல் செவ்<br>தகைமை/தொழில்: கனடா PR (Printing)<br>தொ.இ: B -1681 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி ,<br>8இல் செவ்.<br>தகைமை/ தொழில்: O/L<br>தொ.இ: G-1700 |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகிணி 4,<br>8 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L Canada (Not PR)<br>தொ.இ: B -1682 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3,<br>கி.பா.: 37.5, 7 இல் செவ்.<br>உயரம்: 5'3"<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1702 |
| பிறப்பு: 1974<br>நட்சத்திரம்: திருவோணம் 1,<br>4 இல் செவ்.<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc நிறைவு செய்யவில்லை (கனடா PR)<br>தொ.இ: B -1685 | பிறப்பு: 1975<br>நட்சத்திரம்:பரணி 4,<br>உயரம்: 5'7"<br>கி.பா:- 74<br>தகைமை/ தொழில்: A/L<br>மருந்தாளர்<br>தொ.இ: G -1703 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# தலைமைத்துவமும் முகாமைத்துவமும்

கடந்த வார தொடர்ச்சி...

**நிகழ்ச்சித் தீர்மானம் (Programmed Decision)**

ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விதிகள், கொள்கைகளுக்கு அமைய எடுக்கப்படும் தீர்மானங்கள் நிகழ்ச்சித் தீர்மானம் எனப்படும். நிர்ணயிக்கப்பட்ட விதிகள், கொள்கைகளுக்கு அமைய எடுக்கப்படுவதால தீர்மானங்களை எடுப்பது சுலபம். இதற்கு செல விடப்படும் நேரமும் குறைவாக இருக்கும்.

**நிகழ்ச்சியற்ற தீர்மானம் (Non Programmed Decision)**

நிகழ்ச்சியற்ற தீர்மானம் எனும்போது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு உட்படாது எடுக்கப்படும் தீர்மானங்களைக் குறிக்கும். நிகழ்ச்சியற்ற தீர்மானமெடுத்தலானது எதுவித அமைப்பாக்கத்தையும் கொண்டிராது. இங்கு முகாமையாளருக்கு தீர்மானம் எடுப்பது தொடர்பாகச் சிறந்த அனுபவமும், ஆற்றலும் மாற்றுவழிகளை மதிப்பீடு செய்வதில் திறனும் வேண்டப்படுகின்றது. பொதுவாக நிகழ்ச்சியற்ற தீர்மானமானது புதியதும், சிக்கலானதும், சரியாக வரையறை செய்யப்படாததும், வழமையான நடைமுறைகளைப் பயன்படுத்தி எடுக்கப்பட முடியாததுமான விடயங்களைத் தன்னகத்தே கொண்டது. எனவே நிகழ்ச்சித் தீர்மானத்தை எடுப்பதிலும் பார்க்க நிகழ்ச்சியற்ற தீர்மானத்தினை எடுப்பதில் கூடியளவு திறமை தேவைப்படும். நிகழ்ச்சியற்ற தீர்மானமெடுத்தலானது

| Decision Making | நிகழ்ச்சித் தீர்மானம் | நிகழ்ச்சியற்ற தீர்மானம் |
|---|---|---|
| தீர்மானத்துடன் தொடர்புடைய நிச்சயத் தன்மையின் அளவு | கூட | குறைய |
| தீர்மானத்துடன் தொடர்புடைய நிச்சயமற்ற தன்மையின் அளவு | குறைய | கூட |

நிகழ்ச்சித் தீர்மானமெடுத்தலைவிட கூடியளவான தேடுதல் செயற்பாட்டைக் கொண்டிருக்கும்.

**தனியாள் தீர்மானம் (Individual Decision)**

தனி ஒருவர் மட்டும் தீர்மானத்தினை மேற்கொள்வது தனித் தீர்மானம் எனப்படும். தனியொருவர் தீர்மானத்தினை மேற்கொள்ளும் போது உடனடியாகத் தீர்மானத்தினை மேற்கொள்ளலாம்.

**குழுத் தீர்மானம் / தொகுதித் தீர்மானம் (Group Decision)**

| DECISIONs | தொகுதி தீர்மானங்கள் |
|---|---|
| நன்மைகள் | பல மாற்று வழிகள் தோற்றுவிக்கப்படும் |
| | ஆபத்துக்கள் ஏற்கக் கூடிய தயார் நிலை காணப்படும். |
| | பெரிய சிக்கலான பிரச்சினைகளைக் கையாளலாம். |
| | பக்கச் சார்பிற்கான (Bias) சாத்தியம் மிகக் குறைவு. |
| | ஜனநாயகம் தத்துவங்கள் மதிக்கப்படும். |
| | எல்லோரினதும் ஒத்துழைப்பு கிடைக்கும். |
| தீமைகள் | கூடிய காலம் எடுக்கும். |
| | எல்லோரும் பொது உடன்பாட்டிற்கு வருவது கடினம் |
| | எவரிடமும் தவறுக்கான பொறுப்பைச் சுமத்த முடியாது. |

தனிப்பட்டவர்கள் பலர் ஒன்று சேர்ந்து தீர்மானம் எடுத்தல் தொகுதித் தீர்மானம் எனப்படும். தொகுதியாகத் தீர்மானம் எடுத்தலில் பின்வரும் நன்மைகளும் தீமைகளும் காணப்படுகின்றன. தொகுதியாகத் தீர்மானமெடுத்தலில் பல நுட்பங்கள் (Techniques) பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் பிரதானமானவை,

1) கட்டுப்பாட்டில்லா கலந்துரையாடல் \ மூளையை உருட்டுதல் (Brain Storming)

இங்கு பெறுமதிவாய்ந்த, பயனுறுதிமிக்க வெவ்வேறுவகையான மாற்றுவழிகள் தோற்றுவிக்கப்படும்.

*2)டெல்பி நுட்பம் (Delphi Technique)*

1950ம் ஆண்டு Rand Corporation MY: ஆல் இம்முறை முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. இங்கு தொடர்ச்சியான வினாக்கொத்துக்கள் நிபுணர்களுக்கு வழங்கப்படுவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களைக் கொண்டு முடிவு பெறப்படும்.

*3)யதார்த்தமாக் சிந்தித்தல் (Synectics)*

கோட்டன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட இம் முறையில் தனிப்பட்டவர்கள் பிரச்சினையில் தம்மை ஈடுபடுத்தி பங்கேற்று அதனூடாக மாற்றுவழிகளை உருவாக்குவார்கள்.

**தீர்மானம் எடுத்தலில் தடைகள்**

தீர்மானம் மேற்கொள்பவரின் நடத்தையானது தீர்மானம் எடுத்தல் தொடர்பான செய்முறையில் செல்வாக்குச் செலுத்தும். தீர்மானம் மேற்கொள்பவர் பின்வரும் தவறுகளுக்கு இடமளிக்கக் கூடாது.

பிரச்சினையை இனங்காணலும் வரையறுத் தலும் → பிரச்சினைக்கான மாற் றுத் தீர்வுகளை உரு வாக்கல் → பொருத்தமான தீர்வைத் தெரிவு செய்தலும் அதை நடை முறைப் ப டுத்தலும்

a) புலனுணர்வு (Perception)

b) மாறா நிலைப்படுத்தல் (Stereotyping)

c) அக எண்ணம் சார்ந்த பகுத்தறிவுடைமை Subjective Rationality)

**3.தீர்மானமெடுத்தல் மாதிரிகள் (Decision – Making Models)**

நிறுவனமொன்றின் வெற்றியானது தீர்மானம் எடுத்தலில் தங்கியுள்ளது. கல்விப் புலத்திலேற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க பல்வேறு தீர்மானமெடுத்தல் மாதிரிகள (Decision – Making Models) இன்று நடைமுறையிலுள்ளன. அவற்றுள் முக்கியமானவைகளாக பகுத்தறிவு மாதிரி (The Rational Model), பகுத்தறிவற்ற மாதிரி (The Non Rational Model), கான்யீ மாதிரி (The Carnegie Model), The Incrementalist Model, கட்டமைக்கப்படாத மாதிரி (The Unstructured Model), காபேச் கான் மாதிரி (The Garbage Can Model) என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**3.1.பகுத்தறிவு மாதிரி (The Rational Model)**

தீர்மானமெடுத்தலானது நேரடியான மூன்று படி நிலைகளைக் கொண்ட செயன்முறை ஆகும்.

**அ.குகன்**
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.

படி 1:தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையை இனங்காணல்.

படி 2:தீர்மானம் எடுப்பவர்கள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ பல தீர்வுகளைத் தேடுவர். மாற்றுத் தீர்வுகளடங்கிய ஒரு பட்டியலைத் தயாரிப்பார் கள்.

படி 3:ஒவ்வோர் மாற்றுத் தீர்வுகளையும் ஒப்பு நோக்கி அதில் மிகப் பொருத்தமான தீர்வைத் தெரிவுசெய்தல்.

ஒரு கூற்றுக்குப் பல கருத்துக்கள் இருத்தல், எதிர்வுகூறமுடியாத் தன்மை, சிக்கலான ஒழுங்கற்ற நிலை என்பன பற்றி பகுத்தறிவு மாதிரியில (The Rational Model) கவனம் செலுத்தப்படவில்லை.

**3.2பகுத்தறிவற்ற மாதிரி (The Non Rational Model)**

உத்தம தீர்மானத்திதை மேற்கொள்வதற்கு தகவல்களைப் பெற்றுக் கொள்வதிலுள்ள கடினத்தன்மையும், நேரவரையறையும் தடையாகக் காணப்படும் போது பகுத்தறிவற்ற மாதிரி பயன்படுத்தப்படும்.

உத்தம தீர்மானத்திதை மேற்கொள்வதற்கு தடையாகக் காணப்படும் காரணிகளை சைமன் (Simon - 1950) தொகுத் துள்ளார்.

1)போதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாமை.

2)நேர வரையறை.

3)செலவு வரையறை.

4)ஞாபக வரையறை.

5)தீர்மானம் மேற்கொள்பவரின் வேறுபட்ட புலனுணர்வு (Erception)

6)தீர்மானம் மேற்கொள்பவரின் வரையறுத்த புத்திக்கூர்மை. (Intelence Limit)

(தொடரும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 82

**ஒன்றையொன்று நேரெதிரே நோக்கி வந்து கொண்டிருக்கும் இரு புகையிரதங்களின் கதிகள் முறையே 10Km⁻h, 20Km⁻h ஆகும். இடைத்தூரம் 60வது ஆகவுள்ளபோது ஒரு புகையிரதத்தில் இருந்து 30 Km⁻h கதியுடன் ஒரு புகையிரதத்தின் முன்புற பக்கத்திலிருந்து பறக்க ஆரம்பிக்கும் பறவையொன்று இரு புகையிரதங்களுக்குமிடையே மாறிமாறி இம்மாறாக் கதியுடன் பறந்திருப்பின் இவ்விரு புகையிரதங்களும் ஒன்றையொன்று மட்டுமட்டாக சந்திக்கும் வரை மொத்தமாக பறந்த தூரம் எவ்வளவு?**

விடைகளை 06.05.2013 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**திரு.அ.குகன்**
**ஆசிரிய கல்வியியலாளர்**
**யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி,**
**கோப்பாய்.**

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 81 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**கே. இராஜகோபால்**
**அடைக்கலம் தோட்டம்,**
**கந்தசாமி கோயிலடி,**
**வட்டுக்கோட்டை**

**புதிர் 81 இற்கான கேள்வியும் விடையும்:**
**கட்புல ஒளி ஒரு சொட்டை Quantum எவ்வாறு அழைப்பர்?**
**சக்திச் சொட்டு**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 82

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
[illegible]:..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pipo இன் புதிய படைப்பு


அதிநவீன டேப்லட் ஒன்றினை இலத்திரனியல் சாதனைகளை உற்பத்தி செய்யும் நிறுவனமான Pipo அறிமுகப்படுத்தியுள்ளது.

இது கூகுளின் அன்ரோயிட் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

Pipo M8pro எனும் இந்த டேப்லட் ஆனது 9.4 அங்குல அளவுடையதும், 1280 x 800 Pixel Resolution உடையதுமான தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன் Quad Core Processor மற்றும் பிரதான நினைவகமாக 2GB RAM ஆகியவற்றினையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

மேலும் Android 4.1 Jelly Bean இயங்குதளத்தினையும், 16GB சேமிப்பு வசதியையும் கொண்டுள்ளதுடன் குறித்த சேமிப்பு வசதியினை MicroSD கார்ட்களின் உதவியுடன் தேவைக்கு ஏற்ப அதிகரித்துக் கொள்ளவும் முடியும்.

இவற்றுடன் 5 மெகாபிக்சல்கள் உடைய பிரதான கமெரா மற்றும் 2 மெகாபிக்சல்கள் உடைய வீடியோ அழைப்புக்களுக்கான கமெரா போன்றவற்றினையும் கொண்டுள்ள இச்சாதனத்தின் பெறுமதியானது 229 அமெரிக்க டொலர்களாகும்.




# அழிந்த தரவுகளை மீட்க

கணனிச் சேமிப்புச் சாதனங்களில் சேமிக்கப்பட்டுள்ள முக்கியமான தரவுகள் எதிர்பாராத விதமாக அழிந்துவிடுகின்ற சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு.

இவ்வாறு தரவுகளை தொலைத்து விட்டு செய்வதறியாது திகைத்து நிற்கும் வேளைகளில் கைகொடுப்பதற்கு பல்வேறு Date Recovery மென்பொருட்கள் காணப்படுகின்றன.

இருந்த போதிலும் தரவுகளை மீட்பது மட்டுமன்றி சேமிப்பு சாதனங்களில் ஏற்படக்கூடிய பல்வேறு வழுக்களை (உதாரணமாக Disk Corrupt) நீக்கி அதனை சிறந்த முறையில் இயங்கச் செய்வதற்கு DiskPatch எனும் மென்பொருள் கைகொடுக்கின்றது.

விண்டோஸ் இயங்குதளங்களில் செயற்படக்கூடியதாகக் காணப்படும் இம்மென்பொருளானது பின்வரும் வழுக்களையும் நிவர்த்தி செய்யக்கூடியதாகக் காணப்படுகின்றது.

1. Corrupt MBR (Master Boot Record)
2. Corrupt Partition Tables
3. Accidentally Deleted Partitions
4. Corrupt Boot Sectors
5. Bad Sectors

# மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் ஸ்மார்ட் கைக் கடிகாரங்கள்

தொடுதிரை தொழில்நுட்பத்தினைக் கொண்ட ஸ்மார்ட் கைக் கடிகாரங்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் அப்பிள் நிறுவனம் மற்றும் சம்சங் நிறுவனம் என்பன ஏற்கனவே ஈடுபட்டுள்ள நேரத்தில் சற்று தாமதமாக மைக்ரோசொப்ட் நிறுவனமும் களத்தில் குதித்துள்ளது.

இதன் அடிப்படையில் விண்டோஸ் 8 இயங்குதளத்தி னைக் கொண்டதும் 1.5 அங்குல அளவுடைய தொடுதிரையினை உள்ளடக்கியதுமான ஸ்மார்ட் கடிகாரத்தை உருவாக்குவதில் மைக்ரோசொப்ட் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

மேலும் இக் கைக்கடிகாரமானது சிறிய கணனி ஒன்றினைப் போல செயற்படக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



# இணைய வேகம் எப்படியிருக்கிறது உலகில்..?



இணையத்திற்கு இணைப்பு தரும் வழிகள் தொடர்ந்து மாற்றமடைந்து வருகின்றன. இணைப்பு எப்படிப்பட்டதாயினும், அது வேகமான தகவல் பரிமாற்றம் தருவதையே மக்கள் விரும்புகின்றனர். மின்னல் வேக இணைய இணைப்பு கிடைக்காதா என அனைவருமே விரும்புகின்றனர். கட்டமைப்பு செலவு, கட்டணம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே வேகமான இணைய இணைப்பு கிடைக்கும்.

இந்நிலையில் அதி வேகமான இணைப்பில் முதல் 10 இடங்களைப் பெறும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா இல்லை. அந்நாட்டின் விஸ்தீரணத்தினால், அதன் சராசரி இணைய இணைப்பு வேகம், அந்நாட்டிற்கு முதல் பத்து இடங்களில் கூட இடம் தரவில்லை. 14 ஆவது இடத்தில் உள்ளது. இங்கு உலக அளவில் அதி வேக இணைப்பு தரும் சில நாடுகளின் பட்டியில் இதோ.

**1. ஹொங்கொங் :**

நொடிக்கு 54.1. மெகா பிட்ஸ் வேகம். பன்னாட்டளவில் அதிகமான வேகத்தில் இணைய இணைப்பு தரும் நாடு. மக்கள் பெருக்கம், இணையத்தைப் பயன்படுத்துவோர் அதிகம், இணையத்தில் எந்த பொருள் பற்றியும் பதிவதற்குத் தடையற்ற அரசின் ஆதரவு எனப் பல காரணங்களை இதற்குக் கூறலாம். திருட்டு நகல் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்வதிலும், இணையம் வழி வழங்குவதிலும், சிறுவர்கள் சார்ந்த பாலியல் தகவல்களைத் தருவதிலும் இங்குள்ள இணைய தளங்கள் பயன்படுகின்றன. பேச்சு சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்ட இந்த நாடு, இவை எதனையும் தடுப்பதில்லை. இணையத்தளம் அமைத்து செயற்பட எந்த உரிமமும் பெற வேண்டியதில்லை.

**2. தென்கொரியா:**

நொடிக்கு 48.8 மெகா பிட்ஸ். டிஜிட்டல் விளையாட்டுகளுக்கு உலக அளவில் பெயர் பெற்ற நாடு. உலக அளவில் இணைய வழி விளையாட்டு போட்டியை அடிக்கடி நடத்தும் நாடு. இந்நாட்டின் இணைய அலைக் கற்றையில் பெரும்பகுதி, விளையாட்டுகளை நடத்துவதிலேயே செலவாகிறது. இணைய இணைப்பு கட்டணம் இங்கு மிக மிகக் குறைவு.

அரசின் கொள்கைகள், இணைய பயன்பாட்டைப் பெரிதும் ஊக்குவிப்பதாக உள்ளன. அனைத்து பெரிய நகரங்களிலும், வயர் இணைப்பற்ற இணைய தொடர்பு தரப்படுகிறது. இங்குள்ள உணவு விடுதிகள் அனைததிலும் இலவச வை-பி இணைய இணைப்பு தரப்படுகிறது.

**3. ஜப்பான்:**

நொடிக்கு 42.2 மெகா பிட்ஸ். இலத்திரனியல் துறையில் ஜப்பான் தன் உயர் நிலையை விட்டுவிட்டாலும், தகவல் தொழில்நுட்பத்தில் இன்னும் முன்னணி இடத்தைக் கொண்டுள்ளது. இணையத் தொழில் நுட்பத்தில் முன்னணியில் இருப்பதை, ஜப்பான் தன் தேசியக் கொள்கையாகவும், இலக்காகவும் கொண்டுள்ளது. தகவல் பரிமாற்றத்தை எடுத்துச் செல்ல, இணைய இணைப்பு தருவதில் அதிவேக ஆப்டிக் பைபர் கேபிள்கள், நாடெங்கும் பயன்படுத்தப்படுகின்றன.

**4. லத்வியா:**

நொடிக்கு 37.5 மெகா பிட்ஸ். தொழில் நுட்பத்தில் முன்னேறிய நாடுகளை எண்ணுகையில், லத்வியா அதில் ஓர் இடம்பிடிக்கவில்லை. ஆனால், இணைய இணைப்பினைப் பொறுத்தவரை, வேகமான தகவல் பரிமாற்றம் கூடிய இணைப்பினைத் தருவதில் முன்னணி இடம்கொண்டுள்ளது.

**5. ருமானியா:**

நொடிக்கு 37.4 மெகா பிட்ஸ். இந்நாட்டின் சில நகரங்கள், உலக அளவில் அதிவேக இணைய இணைப்பு தருவதில் முதலிடங்களைப் பிடித்துள்ளன. தென்கொரியாவிற்கு அடுத்த இரண்டாவது இடத்தில் சென்ற ஆண்டில் இடம்பெற்றிருந்தது.

**6. பெல்ஜியம்:**

நொடிக்கு 32.7 மெகா பிட்ஸ். இந்நாட்டின் பெரும்பாலான மக்கள், 'தாங்கள் பயன்படுத்தும் இணைய இணைப்பில் டேட்டாவிற்கான அதிக பட்சத்தினை வரையறை செய்துள்ளனர். இணைப்பு தரும் வேகம் போதுமானதாக உள்ளது.

**7. சுவிட்ஸர்லாந்து:**

நொடிக்கு 32.4 மெகா பிட்ஸ். ஐரோப்பிய நாடுகளில், அதிக வேகத்தில் இணைப்பு தரும் நாடு சுவிட்ஸர்லாந்து. நாட்டின் சனத்தொகை அடிப்படையில், அதிக எண்ணிக்கையில் இணையம் பயன்படுத்தும் மக்களைக் கொண்ட நாடாகவும் இது இடம்பெற்றுள்ளது.

**8. பல்கேரியா:**

நொடிக்கு 32.1 மெகா பிட்ஸ்: குறைந்த அளவிலான அரசு வரிகள், குறைவான செலவில் கிடைக்கும் ம்னித உழைப்பு ஆகியவற்றிற்குப் பெயர் பெற்றதால், பல தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் இங்கு தங்கள் நிறுவனப் பிரிவுகளைக் கொண்டுள்ளன. இந்நாட்டில், பெரும்பாலான இணைய இணைபபுகள் வலையமைப்பின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டு வருகின்றன.

**9. இஸ்ரேல்:**

நொடிக்கு 30.9 மெகா பிட்ஸ். 2001 ஆம் ஆண்டில்தான், இஸ்ரேலில் மக்களுக்கு இணைய வசதி கிடைத்தது. அதன் பின்னர், மிக வேகமாக வளர்ந்து இந்த இடத்தைப்பிடித்துள் ளது. தொலைபேசி மற்றும் கேபிள் கட்டமைபபு மூலம், இங்கு இணைய இணைப்பு வழங்கப்படுகிறது.

**10. சிங்கப்பூர்:**

நொடிக்கு 30.7 மெகா பிட்ஸ். தொழில் நுட்ப கூடு எனச் செல்லமாக அழைக்கப்படும் நாடு. 99 சதவீத மக்கள் இணைய இணைப்பினைக் கொண்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டில், 'அதிபுத்திசாலியான நாடு' எனப் பெயர் எடுக்கவேண்டும் என்ற இலக்கோடு சிங்கப்பூர் செயறபட்டு வருகிறது. அதன் ஒரு முயற்சியாக, இணைய இணைப்பின் வேகம் அதிகரித்து வருகிறது. அதிவேக பைபர் வலையமைப்பு அமைக்கப்பட்டு இணைப்பு தரப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துமிந்த சில்வாவின் நலன்கருதி பிணை வழங்கியது நீதிமன்று

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உட்பட நால்வரின் கொலை சம்பந்தமாக கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் துமிந்தசில்வாவை 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுடன் சரீரப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லலித் ஜயசூரிய நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

குறித்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள 11 ஆவது நபரான துமிந்த சில்வா வெளிநாடு செல்வதை தடுத்து நீதிபதி விதிக்கப்பட்ட பிணை 50 ஆயிரம் ரூபா பணப் பிணையாகவும் மீதியை தலா 5 இலட்சம் ரூபா அடிப்படையில் சரீரப் பிணையாகவும் வைக்குமாறும் தொடர்ந்து உத்தரவிட்டார்.

பிணையில் இருக்கும் போது முறைப்பாட்டாளரின் சாட்சியாளர்களுக்கு தலையீடுகள், மிரட்டல் செய்யப்பட்டதாக முறைப்பாடு கிடைத்தால் பிணையை இரத்துச் செய்து மீண்டும் விளக்கமறியலில் வைப்பதாக நீதிபதி கடும் எச்சரிக்கை செய்தார்.

துமிந்த சில்வாவின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி மாஜிஸ்ரேட் நீதிமன்றத்துக்கு ஏற்கக்கூடிய பிணையாளர்களை ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார்.

துமிந்த சில்வாவின் தகப்பனார் பிரேமலால் டீ சில்வா சமர்ப்பித்த பிணை விண்ணப்பத்தை பரிசீலித்த நீதிபதி ஜயசூரிய பிணைக்கு உத்தரவிட்டார்.

துப்பாக்கிச் சூட்டினால் கடும் காயமுற்ற துமிந்த சில்வா நீண்ட கால சிகிச்சை காரணமாக ஓரளவு குணமடைந்துள்ளார்.இதனால் அவர் வழமையான நிலையில் தமது பெற்றோருடன் இருப்பது அவசியமாகும்.

இதனால் அவரின் சுகாதார நிலையை கருத்திற் கொண்டு பிணை விதிக்குமாறு சட்டத்தரணி அனுஷ பிரேமரத்தின கேட்டுக் கொண்டார். (அ-2)

# நீர் மின் நிலையங்கள் இல்லாவிட்டால் மின்கட்டணம் மேலும் உயருமாம்

## ஐ.தே.க தெரிவிப்பு

ஐக்கிய தேசிய கட்சியினால் நிர்மாணிக்கப்பட்ட நீர் மின் நிலையங்கள் இல்லை என்றால் இலங்கை அரசாங்கத்தின் பாடு மேலும் மோசமாகி விடும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

குறித்த நீர் மின் நிலையங்களால் 30 தொடக்கம் 40 சதவீதமான மின்சார தேவை இலவசமாக பூர்த்தி செய்யப் படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

அரசாங்கத்தின் மீது எழுந்த அழுத்தங்களுக்கு புலம் பெயர்ந்த தமிழர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தது போல அரசாங்கம் தற்போது மின்சார கட்டண அதிகரிப்புக்கு ஐக்கிய தேசிய கட்சி மீது சம்பந்தமில்லாமல் குற்றச்சாட்டை முன்வைக்கிறது.

ஆனால் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியில் நிர்மாணிக்கப்பட்ட நீர் மின்னுற்பத்தி நிலையங்களின் உதவியாலேயே அரசாங்கம் தற்போது ஓரளவுக்கெனினும் மின்சார கட்டண விடயத்தில் சமாளித்து வருகிறது. (அ-2)

# மாலைதீவு பொலிஸாருக்கு இலங்கையில் விசேடபயிற்சி

(கொழும்பு)மாலைதீவு பொலிசாருக்கு இலங்கை விசேட அதிரடிப் படையினர் பயிற்சிகளை வழங்கியுள்ளனர்.

இதன் பிரகாரம் முப்பது மாலைதீவு பொலிஸாருக்கு விசேட பிரமுகர்களுக்கான பாதுகாப்பு தொடர்பில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதுடன் ஆறுவார காலங்கள் இந்த பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

மாலைதீவு பொலிஸாருக்கு பயிற்சி அளிக்கப்பட்டதன் மூலம் இரு தரப்பினருக்கும் இடையிலான உறவுகள் மேலும் வலுப்பெறும் என விசேட அதிரடிப்படை கொமாண்டர் எம்.சீ.ரணவீர தெரிவித்துள்ளார்.


அத்துடன் மாலைதீவு பொலிஸாருக்கு இலங்கை விசேட அதிரடிப்படையினர் வழங்கிய பயிற்சிகளுக்கு மாலைதீவின் துணை பொலிஸ் ஆணையாளர் அஹமட் சவுதி நன்றி தெரிவித்துள்ளார். (அ-2)

# மின்சாரக்கட்டண உயர்வு அரசிற்கு எதிரான சதியா?

## கேள்வியெழுப்புகிறார் அமைச்சர் சம்பிக்க

மின்சாரக்கட்டண உயர்வானது அரசாங்கத்திற்கு எதிரான சதித்திட்டமா என்பதனை ஆராயுமாறு முன்னாள் மின்வலு எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார்.

விசேட கடிதமொன்றின் மூலம் அவர் இதனைக் கோரியுள்ளார்.




வீட்டு பாவனையாளர்களின் மின்சாரக்கட்டணத்தை 35 வீதத்தினால் அதிகரித்து அதன் மூலம் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இடைவெளியை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

நிதி அமைச்சின் செயலாளர் மின்சாரக்கட்டண உயர்வு குறித்த யோசனையை முன்வைத்திருந்தார்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது. எனினும் இந்த யோசனையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

மின்சாரக்கட்டண உயர்வு தொடர்பில் நான் எந்தவிதமான யோசனைத் திட்டங்களையும் முன்வைக்கவில்லை என சம்பிக்க ரணவக்க கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ)



கலாநிதி பண்டிதமணி வைத்தீசுவரக் குருக்களின் சைவக் களஞ்சியம் நூல் வெளியீட்டு விழா அண்மையில் காரைநகர் ஐயனார் ஆலயத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் சி.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும் நூலின் முதற் பிரதியை மனிதநேய ஈகையாளர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்-மானிப்பாய் செய்தியாளர்)

# சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்) ஈசிற்றி ஆங்கிலகல்லூரியில் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வானது நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள ஞானம்ஸ் விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் தலைவர் ஜெ.றஜீவனின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கவுள்ளார். (அ)

# வலி.கிழக்கு பிரதேச சபை கூட்டம் குழப்பத்தில் முடிவடைந்தது

(யாழ்ப்பாணம்) வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் மாதாந்த பொதுக் கூட்டம் சபை செயலாளர் திருமதி ஜெயந்தாசோமராஜின் திட்டமிட்ட அடாவடித்தனத்தால் குழப்பப்பட்டதாக தவிசாளர் அ.உதயகுமார் குற்றம்சாட்டியுள்ளார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் சபையின் மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமான போதே இந்தக் குழப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாதாந்த பொதுக்கூட்டத்தில் மாதாந்த அறிக்கைகளை அறிக் கையிடும் உத்தியோகத்தர் வழமை யான இடத்தில் அமர்ந்து அறிக்கையிடுவதனைவிடுத்து வேறொரு இடத்தில் அமர்ந்து அறிக்கையிடுமாறு செயலாளரினால் கூறப்பட்டதையடுத்தே இந்தக் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு சபையின் தவிசாளர், உறுப்பினர்கள், அறிக்கையிடும் உத்தியோகத்தர் இதுவரை தான் வழமையாக எங்கிருந்து அறிக்கையினை எழுதினாரோ அங்கிருந்தே எழுதுமாறு பணித்தனர்.

இதற்கு சபையின் செயலாளர் நான் தான் கூட்டறிக்கைகளுக்கு பொறுப்பு.நான் சொல்லும் இடத்தில் இருந்துதான் கூட்டறிக்கை எழுத வேண்டும் என்று உத்தியோகத்தரைப் பணித்துள்ளார்.

செயலாளரின் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என சபையின் உறுப்பினர்கள் கூறியதை யடுத்து சபையில் கடுமையாக வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து சபையின் தவிசாளர் மாதாந்த பொதுக் கூட்டத்தினை ஒத்தி வைப்பதாக அறிவித்தார்.இதன் பின்னர் சபையின் தவிசாளரும் உறுப்பினர்களும் சபையை விட்டு வெளியேறினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-6)

# மின்கட்டணங்களை குறைக்க முடியாது!

## வெருட்டுகிறார் அமைச்சர் கெஹலிய

(கொழும்பு) எவ்வாறான போராட்டங்கள் நடத்தப்பட்டாலும் மின்சாரக்கட்டணங்களை குறைக்க முடியாது என அரசாங்கப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

2014 ஜனவரி மாதம் வரையில் மின்சாரக் கட்டணங்களைக் குறைக்க முடியாது. எனினும் மின்சார பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் பூர்த்தியானதன் பின்னர் எதிர்வரும் ஆண்டில் மின்சாரக் கட்டணங்களைக் குறைக்க முடியும்.

1993 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் நீர் மின் உற்பத்தி நிலையங்களின் மூலமான உற்பத்தியை நிறுத்துவதாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளன.

இவ்வாறான ஒப்பந்தங்களின் காரணமாகவே நாடு நெருக்கடியான நிலைமைகளை எதிர்நோக்கி வருகின்றது என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

26



மார்ட்டின் அன்பொன் சோதே சௌசா தன் படைக் கப்பலில் நின்றிருந்தான். யாழ்ப்பாணத்துக்கு எதிராக படை நடாத்தி வந்தாகிவிட்டது. அராபிக் கடலில் இலங்



யாழ்ப்பாணக் கோட்டை நுழைவாயில்

கையின் மேற்குக் கரையை அண்டி நின்ற சங்கிலியின் போர்க்கலங்கள் சில நூறு, அவனுக்குக் கலக்கத்தைத் தந்தன. பண்ணைக்கரையிலிருந்து பாசையூர்க்கரைவரை தமிழ் வீரர்கள் பல நாட்களாக அவர்களது வரவை முன்கூட்டியே அறிந்து எதிர்பார்த்திருக்கிறார்களாம். அதைவிட கிளாலியில் வடக்கர் சேனை தயாராக இருக்கிறது. அத்துடன் தஞ்சாவூரில் குருகுலத்தான் தலைமையில் ஒரு படை புறப்படத் தயாராகியிருக்கிறது. இந்நிலையில் தனது படைகளைத் கரையிறக்குவது அறிவுடமையாகாது.

## போர்த்துக்கேயரின் முதல் படையெடுப்பு

'எவ்வளவு சுலபமாக தென்னிலங்கையில் கோட்டையில் கால்களைப் பதித்தோம். நமது வியாபாரத்துக்கான கோட்டையையும் ஜயவர்த்தனபுரத்தில் கட்டிக்கொண்டோம். தனது பகைமைகளை வென்று கோட்டையைக் காப்பாற்றுவதற்காக கோட்டை மன்னன் புவனேகபாகு தம்மிடம் சரணடைந்து திறை செலுத்துகிறான். அவன் எவ்வளவு தூரம் நம்புகிறான்? தன் மகளின் மகன் தர்மபாலனுக்குக் கோட்டை அரசின் முடி கிடைக்கவேண்டும் என்பதற்காக தர்மபாலன் போல தங்கத்தால் ஒரு பதுமை செய்து போர்த்துக்கல்லிற்கு மன்னனிடம் அனுப்பி வைத்துள்ளான். அங்கு முடிசூட்டி மன்னன் திருப்பி அனுப்பி வைப்பான். தர்மபாலனின் தந்தையும் புவனேகபாகுவின் மருமகனுமான விதியபண்டாரன், புவனேபாகுவிற்குப் பிறகு கோட்டை அரசு தனக்குரியதென்கிறான். அசகாயசூரன் அவன் புவனேகபாகுவின் தம்பி மயாதுன்னை தமயனின் அரசைக் கைப்பற்றத் திட்டமிடுகிறான். அதற்காக யாழ்ப்பாண அரசனிடமும் படையுதவி பெறவுள்ளான். விதிய பண்டாரத்திடமிருந்து, மாயாதுன்னையிடமிருந்து தன் ஆட்சியைக் காப்பாற்ற நமது உதவி தேவை. யாழ்ப்பாண அரசு சுதந்திரமானது. எவர் உதவியும் தேவையில்லை.

போர்த்துக்கேயர் கப்பித்தான் சௌசா படைகளை இறக்கி மோதுவதா விடுவதா எனத் தவித்தான். நன்கு திட்டமிட வேண்டும். உதவக்கூடிய பரராசசிங்கன், காக்கை வன்னியன் இருவரும் இராச்சியத்திலில்லை. எம்மிடம் அடைக்கலம் புகுந்துவிட்டார்கள். சங்கிலி மன்னன் போர்த்துக்கேயருக்கு எதிராகவே இருந்தான். போர்த்துக்கேயரின் மரக்கலம் ஒன்று நெடுந்தீவில் பொருட்களுடன் கரையொதுங்கியபோது மகா மந்திரிதான் அதனை மீளப் பெற உதவினார். அதுவும் காக்கைவன்னியன் வகுத்த திட்டத்தால் நிறைவேறியது. தென்னிலங்கை போன்று வியாபாரத்திற்கு யாழ்ப்பாணத்தில் வாசனைப் பொருட்கள் இல்லை. எனினும் முத்துக்கள், யானைகள், பனம்பொருட்கள் முக்கியமாக மரங்கள் உள்ளன. மதம் மாற்றுவதற்குப் படித்த மக்கள் உள்ளனர். அவர்களிடம் சாதிப்பிரிவுகளும் வறுமையும் உள்ளன. மன்னனோ கொடூரமாகவுள்ளான்.

கைப்பற்றுதலை தெற்கே மன்னாரில் இருந்து தொடங்கியிருக்க வேண்டும். மன்னார் இராச அதிகாரி இளஞ்சிங்கன் போர்த்துக்கேய பொற்காசுகளுக்கும் மதுவுக்கும் பொருட்களுக்கும் மயங்கக்கூடியவன்.

போர்த்துக்கேய படைக் கலங்கள் யாழ்ப்பாணக் கடலேரிக்குள் பரவலாக நுழைந்துள்ளன. பாசையூர் வரை அவை மிதந்தன. சுண்டிக்குளி வாயில் திறந்திருந்தமையால் அவை வங்காள விரிகுடாவுக்குள்- இந்துசமுத்திரத்துள் பிரவேசிக்க முடியும். படைக் கலங்களிலிருந்த போர்வீரர்கள் கரையிறங்காது கலங்களில் சௌசாவின் கட்டளைக்காகக் காத்திருந்தனர். வருன குலத்தானின் கலங்கள் வீரர்களுடன் எந்தக் கணத்திலும் சுண்டிக்குளம் வாயிலூடாக கடனீரேரியுள் பிரவேசிக்கலாம். தருணம் ஏற்றதாக சௌசாவுக்குப் படவில்லை. காலதாமதம் செய்தான்.

செங்கை ஆழியான்

(தொடரும்)

# ராஜீவ் கொலை..?

# விடை தெரியாத வினாக்கள்

...★ அரசாங்கமே ஏதும் ஒரு முடிவுக்கு வராதபோது சுப்பிரமணியசுவாமி மட்டும் விடுதலைப் புலிகள்தான் ராஜீவைக் கொன்றார்கள் என கூறியதன் மர்மம் என்ன? பல கோணங்களில் விசாரிக்கப்பட வேண்டிய ஒரு கொலைப் பின்னணியை விடுதலைப் புலிகள் கொன்றார்கள் என்ற ஒற்றை கோணத்தில் மட்டும் நடத்த வற்புறுத்திய கார்த்திகேயனின் நோக்கம் என்ன?

★ சிறப்பு விசாரணை அதிகாரி ரகோத்தமன், இந்திய புலனாய்வுத்துறையின் இயக்குனராக இருந்த எம்.கே. நாராயணன் ராஜீவ் கொல்லப்பட்ட அந்த இடத்தில் பிடிக்கப்பட்ட வீடியோ டேப்பை தராமல் மறைக்கிறார் என்ற பகிரங்கக் குற்றச்சாட்டுக்கு பதில் என்ன?

★ ராஜீவ் கொலை வழக்கில் ஜெயின் மற்றும் வர்மா கமிஷன் அரசாங்கத்துக்கு கொடுத்த முக்கிய கோப்புகள் அடங்கிய (File No 1/12014/5/91-IAS/DIII) எங்கே? சந்திராசாமியின் நெருங்கிய நண்பரும் அன்றைய பிரதம மந்திரியுமான நரசிம்ம ராவ் அந்த முக்கியக் கோப்புகளை அழித்ததின் மர்மம் என்ன? எந்த முக்கிய நாடுகளையும், நபரையும் காப்பதற்காக அந்த கோப்புகள் அழிக்கப்பட்டன?

★ வாழப்பாடி ஏற்றுக் கொள்ளவில்லை. மூப்பனார் அக்கறை காட்டவில்லை. ஆனால் மரகதம் சந்திரசேகர் மட்டும் டெல்லி சென்று ஏன் சிறிபெரும்புதூருக்கு வரவேண்டும் என்று ராஜீவை வற்புறுத்தினார்?

★ மறுபடியும் அமைதிப்படை தங்கள் நாட்டில் நுழையலாம் என்கிற எண்ணத்தில் இந்தியாவுக்கு வலுவான தலைவர் இருக்கக்கூடாது என்று இலங்கை அரசு ஏன் நினைத்திருக்கக் கூடாது?

★ விமான நிலையத்தில் ராஜீவை சந்தித்தார் கவிஞர் காசி ஆனந்தன். அவர் பிரபாகரனிடமிருந்து ராஜீவுக்கு கொண்டு வந்த தகவல் என்ன? ஈழ விடுதலைக்கு ராஜீவின் உதவி தேவை என்று பிரபாகரன் காசி ஆனந்தன் மூலமாக வேண்டுகோள் விடுத்திருந்தால் ஏன் அவரை பிரபாகரன் கொலை செய்ய வேண்டும்?

★ இந்தியா மற்றும் தமிழகத்தில்தான் தனக்கு அனுதாபமும், ஆதரவும் கிடைக்கும் என்பது பிரபாகரனுக்கு தொியும். அப்படியிருக்கும்போது இந்த மக்களின் வெறுப்பை சம்பாதிக்கிற தவறைச் செய்து, நாட்டைவிட்டே துரத்தப்பட்டு தடை செய்யப்படுகிற அளவுக்கான முட்டாள்தனத்தையா பிரபாகரன் செய்தார்?

★ லதா கண்ணன், ராஜீவ் காந்தியை நிறுத்தி கவிதை படித்தார். அதுவே பக்கத்திலிருந்த தனு என்கிற மனித குண்டு வெடிக்கக் காரணமாக இருந்தது. ஏன் அவர் பெயர் குற்றவாளிப் பட்டியலில் இல்லை? லதா கண்ணனை பயன்படுத்தித்தான் தனு உள்ளே வந்தார். இறந்து போன ஹரிபாபு குற்றவாளி என்றால் லதா கண்ணனை ஏன் சேர்க்கவில்லை? காங்கிரஸ் மற்றும் அதன் தொண்டர்களின் மீது புலனாய்வுத் துறைக்கு ஏன் இத்தனை பரிவு?

அப்பாவி பொதுமக்கள், பாதுகாப்பு அதிகாரிகள் பலர் ராஜீவுடன் உயிரிழந்தார்கள். கொல்லை நடந்த கூட்டத்திற்கு முன்பு நடந்த கூட்டம் வரையில் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் ராஜீவ் காந்தியை விட்டு விலகாமல் அட்டை போல ஒட்டிக் கொண்டிருந்த மாநில தலைவர்கள் வாழப்பாடி ராமமூர்த்தியும், மூப்பனாரும், ஜெயந்தி நடராஜனும் சிறிபெரும்புதுரில் மட்டும் 100 மீட்டர் தொலைவிலேயே நின்றுவிட்டதன் மர்மம் என்ன?

★ தனு, சுபா, சிவராசன் மூவரையும் சிறிபெரும்புதூருக்கு அழைத்து வந்தவர் லதா பிரியகுமார் என்று கருதப்படுகிறது. குறிப்பாக பெண்கள் பகுதிக்கு அழைத்து வந்து லதா கண்ணனிடம் அவர்களுக்கு உதவும்படி சொன்னார். அவர் மீது ஏன் குற்றம் சுமத்தப்படவில்லை.

★ ராஜீவின் பயணத் திட்டத்தை தீட்டிய காங்கிரஸ் கட்சியை சேர்ந்த மார்க்ரெட் ஆல்வாவின் வேண்டுகோளுக்கிணங்கத்தான் சிவராசனுக்கு பெங்களூரில் வீட்டை வாடகைக்குக் கொடுத்ததாக ரெங்கநாதன் வாக்குமூலம் அளித்தார். இதில் உண்மை உண்டா என்பதை விசாரித்தார்களா?


★ வெளிநாட்டு உளவு நிறுவனத்தை சேர்ந்தவர்கள் சங்கேத மொழியில் சந்திரசாமி மற்றும் சுப்ரமணிய சாமியிடம் ராஜீவ் கொலை பற்றி நடத்திய உரையாடல் என்று பதிவு செய்து வைத்திருந்த முக்கியஆதாரம்ஒன்றை பிரதம அலுவலக உயர் அதிகாரி தொலைத்து விட்டதாக கூறுவது எப்படி?

★ பெல்ட்பாம் (வெடி குண்டு) தயாரிக்கப்பட்டது எங்கே,? யார் தயாரித்தது? என இது வரையில் விசாரிக்கவேயில்லை என சிறப்பு விசாரணை அதிகாரி ரகோத்தமன் தெரிவித்திருக்க வெடிகுண்டுக்கு பயன்படுத்தப்பட்ட பேட்டரி வாங்கிக் கொடுத்ததாக சொல்லி பேரறி வாளனுக்கு தூக்குத் தண்டனை அறிவித்து 22 ஆண்டுகள் சிறையில் அடைத்திருப்பது எதனால்?

★ ராஜீவ் கொலை வழக்கில் 22 ஆண்டுகளாக விடை தெரியாத கேள்விகள் இதுபோன்று பல இருக்க... காவற்றுறை அதிகாரிகளின் விசாரணையில்ஒப்புக்கொண்டதாகசொல்லி ஒருவருக்குதூக்குத்தண்டனைவழங்குவது உலகில் எந்த நாடுகளின் நீதித்துறையும் பின்பற்றாத ஒரு நடைமுறையை இந்தியாவில் பின்பற்றுவது அறி விற்கு உகந்ததா?

★ ராஜீவ் காந்தியின் இழப்பை சொல்லி ஈழத்தமிழர்கள், தமிழக மீனவர்கள், மூன்று தமிழர்கள் என ஒட்டுமொத்த தமிழினத்தையும் அழிக்க துணிவது சரியா?

★ 19 வயது சிறுவர்களாக சிறை சென்று 22 ஆண்டுகளாக இளமை கழிந்து இன்று தூக்குக் கொட்டடையில் நிறுத்தப்பட்டிருக்கும் பேரறிவாளன், முருகன் ,சாந்தன் ஆகிய மூன்று தமிழர்களையும் தூக்கு மேடையில் ஏற்றத் துணியும்போது தமிழக மாணவர்களாகிய நாங்கள் நீதி பெற களம் இறங்குவோம். அப்போது நீதிக்காக எங்களது




பெற்றோர்களாகிய நீங்கள், உறவுகளாகிய நீங்கள், ஆசான்களாகிய நீங்கள், அரசியல் தலைவர்களாகிய நீங்கள் எங்களுக்குத் துணை நிற்பீர்கள் என்ற நம்பிக்கையுடன்......

-இணையம்-

(முற்றும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். இந்து அணியினர் முன்வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலமாக: எஸ். நிமலன் (பிரதி அதிபர்), சத்தியரூபி சுரேந்திரன் (உதவி அதிபர்), கே. பகீரதன் (அணி பொறுப்பாசிரியர்), வி. வாமணன் (அணித் தலைவர்), வி. கணேசராஜா (அதிபர்), ஜே. சஜகன் (உதவி அணித் தலைவர்), கே. கே. வாசவன் (அணி முகாமையாளர்), பி. ஜெயரட்ணராஜா (விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்), பீ. ஞானதேசிகன் (பிரதி அதிபர்); மத்திய வரிசையில் நிற்பவர்கள்: பி. ஜனவதசர்மா, ஜே. கல்கோகன், ஆர். ருக்ஷ்மன், ஏ. கௌரிசங்கர், எஸ். சாரங்கன், வீ. குகனன், எம். சிவஜெனன், ஜீ. மதுரசன், என். நிலோஜன் டிலக்சன், ஜே. உதயன்; பின்வரிசையில் நிற்பவர்கள்: ஜே. பானுகோபன், ஆர். கஜநாத், வீ. சிந்துஜன், எம். துவாரகன்.

### வீ.ரீ.எஸ்.சிவகுருநாதன் கிண்ணத்துக்கான துடுப்பாட்டம்

# கொழும்பு ஆனந்தா Vs யாழ்.இந்து



## யாழ்ப்பாணத்தில் இன்று மோதல்

கொழும்பு ஆனந்தா கல்லூரி அணிக்கும் யாழ். இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான வீ.ரீ.எஸ். சிவகுருநாதன் கிண்ணத்திற்கான இரண்டாவது வருடாந்த நட்புறவு கிரிக்கெட் போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் (26ஆம், 27ஆம் திகதிகளில்) நடைபெறவுள்ளது.

இனங்களிடையே நல்லிணக்கம், நட்புறவு, சகோதரத்துவம் நிலைக்கவேண்டும் என்ற உயரிய நோக்குடன் இந்தப் போட்டி நடத்தப்படுகின்றது.

ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட இந்த இரண்டு பாடசாலைகளுக்கும் உறவுப் பாலமாக இருந்த ஒருவரின் பெயரில் நட்புறவு கிரிக்கெட் போட்டியை நடத்துவதற்கு இரண்டு பாட சாலைகளினதும் பழைய மாணவர் சங்கங்களும் இணங்கியதன் பலனாக இப்போட்டி கடந்த வருடம் முளைவிட்டது.

யாழ்.இந்துக் கல்லூரியில் கல்வி கற்று பிற்காலத்தில் இருபது வருடங்களுக்கு மேலாக ஆனந்தாக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றி, தலைமையாசிரியர் தரத்துக்கு உயர்த்தப்பட்ட அமரர் வீ.ரீ.எஸ்.சிவகுருநாதனை கௌரவிக்கும் வகையிலேயே இந்த நட்புறவுக் கிரிக்கெட் போட்டி நடத்தப்படுகிறது.

ஆனந்தாக் கல்லூரியின் 125 ஆவது வருடாந்தப் பூர்த்தி விழாவின்போது அப்போதைய பழைய மாணவர் சங்கத் தலைவர் திலக் கருணாரட்ன இப்போட்டியை நடத்துவதற்கான யோசனையைத் தன்னி டம் முன்வைத்தார் என யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் போஷகரும் கொழும்புக் கிளையின் இதற்கு முன்னைய தலைவரும் தற்போது இந்த ஆட்டத்துக்கான திட்ட ஏற்பாட்டாளருமான எஸ்.இராகவன் தெரிவித்தார். சில தடைகளுக்கு மத்தியில் இரண்டு பாடசாலைகளினதும் பழைய மாணவர்கள், சங்க உறுப்பினர்கள் ஆகியோர் எடுத்துக்கொண்ட விடாமுயற்சியாலும் கல்லூரிகளினது அதிபர்களது ஒத்துழைப்பினாலும் இந்த எத்தனம் வெற்றி அளித்ததாக இராகவன் குறிப்பிட்டார்.

மேலும் இப்போட்டியைக் கண்டுகளிக்கவென ஆனந்தாக் கல்லூரியின் தற்போதைய மற்றும் பழைய மாணவர்கள் அடங்கிய 200 இற்கும் மேற்பட்டவர்கள் யாழ்.வரவுள்ளமை விசேட அம்சமாகும்.

எனவே யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் இப்போட்டிக்கு வருகை தந்து உற்சாகப்படுத்துமாறு போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வருடப் போட்டி யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையினரின் பூரண அனுசரணையுடன் நடைபெறவுள்ளதுடன் ஆரம்ப வைபவத்தில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் பெருமைக்குரிய பழைய மாணவர் ஒருவர் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.


அதுமட்டுமல்லாமல் கடந்த வருடத்தைப் போன்றே ஆனந்தாக் கல்லூரி அதிபர் கேணல் எல்.என்.டி. தர்மசேனா தமிழ் மொழியிலும், இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா சிங்கள மொழியிலும் சிறப்புரைகள் ஆற்றவுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இரண்டாம் நாள் போட்டி முடிவில் பரிசளிப்பு வைபவம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து யாழ். கிறீன் கிராஸ் ஹோட்டலில் யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதனின் தலைமையில் முக்கிய விருந்தாளிகளின் ஒன்றுகூடலும் இரவுப் போசன விருந்தும் நடைபெறும்.

இரண்டு கல்லூரிகளுக்கும் இடையில் கடந்த வருடம் நடைபெற்ற அங்குரார்ப்பண வீ.ரீ.எஸ். சிவகுருநாதன் கிண்ண நட்புறவுக் கிரிக்கெட் போட்டியில் 10 விக்கெட்டுக்களால் ஆனந்தாக் கல்லூரி வெற்றியீட்டியது.

இவ்வருடம் தனது சொந்த மண்ணில் போட்டி நடைபெறுவதால் யாழ். இந்துக் கல்லூரி போட்டியில் திருப்பு முனையை ஏற்படுத்தும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் போட்டியில் யார் வெற்றிபெறுகிறார்கள் என்பதை விட நட்புறவும் சகோதரத்துவமும் வெற்றிபெற்று அது நிலைத்திருக்க வேண்டும் என்பதே பலரதும் பிரார்த்தனை ஆகும்.



ஆனந்த கல்லூரி அணியினர் முன்வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலமாக: சமில் பெரேரா (உதவி பயிற்றுநர்), தாமலக்க மஹாமிதாவ, கேணல் எல். எம். டி. தர்மசேன (அதிபர்), லெப்டினன் கேணல் ஜகத் அல்விஸ் (விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்), பிரியன்கர நந்தசேன (அணி சிரேஷ்ட பொறுப்பாசிரியர்), விப்புல சித்தமகே (சிரேஷ்ட பயிற்றுநர்); மத்திய வரிசையில் நிற்பவர்கள்: தசுன் விஜேசிங்க, தாரண ரவிந்து, டில்ஷான் கடவத்தஆ[illegible] சிறிவர்தன, குஷில் பெரேரா, இசுறு குணசேகர, சுச்சிர பரனதல; பின்வரி[illegible]சிய, அதீஷ ராஜரத்ன, லக்கன ஜயசேகர, டிலீப்பா ஜயலத், பசிந்து திரிமதுர.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

438

அம்புலிமாமா கதைகள்

## காணாமல்போன மீன்



எட்டு வயது பவானி மிகவும் கவலையுடன் மீன் தொட்டிய ருகே அமர்ந்திருந்தாள்.

இன்னும் ஒருமுறை மீன்களை எண்ணிப்பார்த்தாள். மொத்தம் 12 பெரிய மீன்களும் 7 குட்டி மீன்களும் இருக்க வேண்டும்.

ஆனா லும் பெரிய மீன்களில் ஒன்றைக் காணவில்லை. அது வும் இரண்டு மாதங்களுக்கு முன்பு ராஜு மாமா அவளது பிறந்தநாள் பரிசாக அந்த மீனைக் கொடுத் திருந்தார்.

அந்த மீனின் அடையாள மும் ஞாபகமும் இருந்தது. வெள்ளை நிறத்தில் தங்கம் இருந்தால் எப்படியிருக்குமோ அதுபோல ஜொலிக்கும் வண ணத்தில் சுறுசுறுப்போடு நீந்திக் கொண்டேயிருக்கும். அதுவும் ஓய்வின்றியே.

அது ஓயாமல் நீந்துவதைக் கண்ட பவானி ஒருநாள் தன் அம்மாவிடமே அது பற்றிக் கேட்டுவிட்டாள்.

அம்மா, இந்த மீனுக்கு ஓய்வே கிடையாதாம்மா? என்று கேட்க அம்மாவும் இதென்ன கேள்வி? நம்மைப் போல அதுவும் ஓய்வெடுக்கும் என்றாள்.

இல்லம்மா நான் எப்போ வந்தாலும் இந்த மீன்கள் சந்தோசமாக துள்ளிக்குதித்துக் கிட்டேயிருக்கே என்றாள் பவானி.

ஓ! அதுவா தினமும் நீதானே அதுங்களுக்கு தீனி போடுற. அதனால இருக்கும் என்றாள் அம்மா.

ஆனாலும் பவானியால் அம்மா சொல்வதை ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. ஏனென் றால் இரவில்கூட அந்த மீன் கள் தூங்கிப்பார்த்ததில்லை. தவிரவும் வீட்டில் மற்றவர்க ளும் அவற்றுக்கு தீனி போடத் தான் செய்கிறார்கள்.

ஆனாலும் இம்மீன்கள் தன்னை மட்டும் பிரத்தியேகமாக வந்து வந்து பார்க்க வருவதாக பவானி நினைத்தாள். தன்னை மட்டுமே அவைகள் நேசிக்கின் றன என்றும் நம்பினாள்.

அப்படிப்பட்ட மீன்களில் ஒன்றை இப்போது காண வில்லை. அந்த மீனுக்கு என்ன கதி நேர்ந்ததோ? என்று பவானி மிகவும் கவலைப்பட் டாள்.

இனியும் அழுதுகொண்டு உட் கார்ந்தும் இருப்பதைவிட அந்த மீன் எப்படிக்காணாமல் போயி ருக்கும் என்று துப்பறிந்து பார்ப்பதே மேல் என நினைத் தாள்.

கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்துக்கொண்டாள். மீன் தொட்டியை சுற்றிலும் பார் வையை ஓடவிட்டாள். மீன் தொட்டிக்கு வெளியே கொஞ் சம் தண்ணீர் சிந்தியிருந்தது. அங்கிருந்து வாசல் வரை தண் ணீர் சொட்டுச் சொட்டாய் சென்று கடைசியில் மறைந்து விட் டது.

பவானிக்குபுரிந்து விட்டது. யாரோ சத்தம் போடாமல் வந்து மீனைப்பிடித்துச் சென்றிருக்கி றார்கள் என்பதை உணர்ந்தாள்.

யாராக இருக்கும் எதிர்வீட்டு இளவரசி? அல்லது ராதா? பக் கத்துவீட்டு ரவி? இவர்களில் ஒருவர்தான்.


முதலில் இளவரசியின் வீட்டுக் குச் சென்றாள். அங்கே இளவ ரசியுடன் பேசிப்பார்த்ததில் அவள் மீது பவானியால் சந்தே கப் படமுடியவில்லை.

ராதாவையும் சென்று பார்த் தாள் பவானி. அங்கேயும் ஒரு மீன் தொட்டியி ருந்தது. அருகில் சென்று [illegible] போன மீன் அங்குமில்லை.

ராதா பவானியின் அருகே வந்து தோளைப்பிடித்துக் கேட் டாள். என்ன பவானி உனக்கு என்னாச்சு? ஒரு மாதிரியா இருக் கியே என்றாள்.

பவானியும் நடந்ததை ராதா விடம் கூறினாள். ராதாவிற்கு எல்லாம் புரிந்துவிட்டது. உடனே அவள் பவானி உங்கள் வீட்டி ற்கு வந்து மீனை எடுத்துட்டுப் போனது ரவியாகத்தான் இருக் கும்.

கொஞ்ச நேரத்திற்கு முன் னாடி அவன் உங்கள் வீட்டிலே



இருந்து வெளியே ஓடிவந்ததை நான் பார்த்தேன் என்றாள்.

ராதாவின் அந்த வார்த்தைகள் பவானிக்கு நம்பிக்கை அளித் தது.

உடனே இருவரும் ரவியின் வீட்டை நோக்கி விரைந்தனர். ரவியின் அம்மா அவர்களை வரவேற்றார்.

அவரிடம் பவானி ரவி எங்கே ஆன்ட்டி என்றாள்.



அவன் ஏதோ கதைப்புத்தகம் படித்துக்கொண்டிருக்கிறான். ஏன் என்ன விடயம்? என்றாள் ரவியின் அம்மா. உடனே ரவியையும் அழைத்தாள்.

சற்று நேரத்தில் ரவியும் வெளியில் வந்தான். அவன் கண்களே அவனைக் காட்டிக் கொடுத்தன. ஆனாலும் அவ னது வாய் பொய் சொன்னது. என்னது மீனைக் காணோமா? நான் பார்க்கவில்லையே என்றான்.

மேலும் நான் எடுத்து வந்தால் அதை எங்கே வைத்து வளர்ப்பேன் என்றான். அவன் சொன்னதைக் கேட்ட தும் பவானி அதிர்ச்சியுற்றாள். கண்கள் இருண்டன. அங்கே யிருந்த நாற்காலியில் சரிந்து விட்டாள்.

உடனே ராதா அவளைத் தோளோடு சாய்த்துக் கொண் டாள். ஆன்ட்டி கொஞ்சம் தண்ணீர் கொடுங்க என்றாள்.

உடனே ரவியின் அம்மாவும் ஒரு பெரிய டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்தார். அதனை வாங்கிப் பவானியிடம் கொடுத்தாள் ராதா.

என்ன ஆச்சரியம்? காணாமற் போன மீன் அந்தத் தண்ணீரில் நீச்சல் அடித்துக்கொண்டிருந் தது.

அதனைப் பார்த்ததும் பவானி சந்தோசத்தில் கூச்சலிட்டாள். இதோ என் மீன் கிடைத்து விட்டது என்று கத்தினாள்.

இப்போது அனைவருக்கும் புரிந்து விட்டது. மீனை எடுத்து வந்து குடத்து நீரில் போட்டது ரவிதான் என்று. அதனால் ரவியின் அம்மாவும் ரவியைக் கடிந்து கொண்டாள். ரவியோ தன் தவறு வெளிப் பட்டதே என்று தலையை தொங்கப் போட்டுக் கொண் டான்.

தன்னுடைய மீன் கிடைத்த சந்தோசத்தில் பவானி மீனை எடுத்துக்கொண்டு ராதாவுடன் தன் வீட்டை நோக்கித் திரும்பி யாக நடக்கலானாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசுக்கு உறைக்கத் தொடங்கியுள்ள உண்மைகள்


"இலங்கைக்கு வாருங்கள். இங்குள்ள நிலைமைகளை வந்து பாருங்கள்" என்று அழைப்பு விடுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய நாடாளுமன்றக் குழுவின் திருணாமுல் காங்கிரஸ் உறுப்பினர், "தமிழ் மக்களுக்கு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் என்று நான் நம்பவில்லை" என்று கூறிய இந்தக்கருத்து நிச்சயம் எரிச்சலூட்டும். அதுவும் தமிழர்களின் பிரச்சினையை அதிகம் அறியாத, அதனுடன் அதிகம் தொடர்புபடாத இந்திய வடமாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இந்தக் கருத்து ஏற்பட்டுள்ளது. நிச்சயமாக புதுடில்லியின் கவனத்தை ஈர்த்திருக்கும். இது, இலங்கைத் தமிழர் விவகாரத்தில் புதுடில்லியின் போக்கில் எதிர்காலத்தில் மாற்றங்கள் உருவாகுவதற்கானஅடிப்படையாகஅமைந்தாலும்கூட ஆச்சரியமில்லை.

### இலங்கைப் பயணம்

அண்மையில் இந்திய நாடாளுமன்ற உறுப்பின்ர்களின் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தது. 2009 இல் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட மூன்றாவது இந்திய நாடாளுமன்றக் குழு இதுவாகும். முதலாவது குழு, தி.மு.க. உறுப்பினர் ரி.ஆர். பாலுவின் தலைமையில் 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வந்தது. அதில் கனிமொழி, திருமாவளவன் போன்றவர்களும் இடம் பெற்றிருந்தனர். ஆனால், அ.தி.மு.க உறுப்பினர்கள் எவ்ரும் இடம் பெறவில்லை. இரண்டாவது குழு, கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் எதிர்க் கட்சித் தலைவி சுஸ்மா சுவராஜ் தலைமையில் கொழும்பு வந்தது. இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மட்டுமே இடம்பெற்றனர். ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் அதில் பங்கேற்காமல் விலகிக் கொண்டனர். மூன்றாவது குழு, கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை இலங்கையில் பயணத்தை மேற்கொண்டிருந்தது. இந்தக் குழுவில் இந்தியாவின் வடமாநிலங்கள்ளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும்தான் இடம் பெற்றிருந்தனர். தென்மாநிலங்களான ஆந்திரா, கர்நடகா மாநிலத்தவர்கள் கூட இருக்கவில்லை.

### உண்மையைக் கண்டறியும் குழு

ரி.ஆர்.பாலு தலைமையிலான குழு வந்தபோது போர் முடிந்து சில மாதங்களே ஆகியிருந்தன. மூன்று இலட்சம் மக்கள் முகாம்களுக்குள் அடைக்கப்பட்டு அவதிப்பட இறுதிப் போரில் அகப்பட்ட தமது உறவினர்கள் இருக்கிறார்களா இல்லையா என்று வெளியே இருந்தவர்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்த காலம். போதிய அடிப்படை வசதிகளேமறுக்கப்பட்டிருந்த அந்தக் காலத்தில் மக்களின் சுதந்திரம், உரிமைகள் பற்றியெல்லாம் பேசவே முடியாதிருந்த





சூழல் அது. யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்கும்சென்ற அவர்கள் கடைசியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து சந்தோஷமாக கை குலுக்கிவிட்டுச் சென்றனர். உண்மையைக் கண்டறியும் அந்தக் குழுவின் வருகையால் அவலத்துக்குள் சிக்கிப் போயிருந்த மக்களுக்கு எந்தப் பயனுமே ஏற்படவில்லை. இந்தளவுக்கும் அந்தக் குழுவின் பயணம், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலையை நேரில் கண்டறிந்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்த இந்திய அரசுக்கு ஆலோசனை கூறுவதே அடிப்படை நோக்கமாக இருந்தது. ஆனால், அந்தக் குழுவின் பயணத்தினால் எந்தப் பயனும் விளையவில்லை. கடந்த ஆண்டு சுஸ்மா சுவராஜ் தலைமையில் வந்த குழு, உண்மையைக் கண்டறியும் நோக்கில் வரவில்லை. சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று வந்த குழு அது. ஆனாலும், அந்தக் குழு யாழ்ப்பாணம் சென்றது. வன்னிக்குச் சென்றது. கிழக்கிற்குச் சென்றது. நிலைமைகளைப் பார்வையிட்டது. இந்தக் குழு வந்தபோது போர்ச் சூழல் தணிந்து போயிருந்தது. முதல் குழு வந்த போது இருந்த நிலைமையுடன் ஒப்பிடுகையில் ப்பாரிய வேறுபாடுகள் இருந்தன.

### போரின்முடிபு

அழிந்துபோன கட்டடங்களும் வீதிகளும் உருமாறியிருந்தன. போர் முடிந்துவிட்டது. அபிவிருத்திப் பணிகள் நடக்கின்றன. அடுத்து அதி காரப்பகிர்வுக்கு என்ன செய்யப்போகிறது அரசாங்கம் என்று கேள்வி எழுப்பியது அந்தக் குழு. அதற்கு 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாக்குறுதி அளித்தார். இந்தக் குழு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசியது. ஆனால், அவருடன் விருந்துண்ணாமல் தவிர்த்தது. சுஸ்மா சுவராஜ் தனியாகத் தன் மகளுடன் அலரிமாளிகைக்குப் போய் விருந்துண்டு விட்டு திரும்பினார்.

### 13ஆவது திருத்தம்

பின்னர் அரசாங்கம் சுஸ்மா சுவராஜுக்கு 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி எந்த வாக்குறுதியையும் கொடுக்கவில்லை என்று குத்துக்கரணம் அடித்தது. இந்தக் குழுவும் இங்கிருந்துபோய் ஒரு அறிக்கையை மத்திய அரசுக் குக்கொடுத்தது. குழுவில் இடம்பெற்றிருந்த காங்கிரஸ் உறுப்



பினர்கள் தனியாகவும் அறிக்கை கொடுத்தனர். இந்திய அரசின் போக்கிலும் சரி, இலங்கை அரசின் போக்கிலும் சரி பெரிய மாற்றங்கள் ஏதும் நிகழ்ந்துவிடவில்லை. இப்போது மூன்றாவது குழு அண்மையில் வந்து போயிருக்கிறது. இந்தக் குழுவில் தமிழ் அல்லது தமிழர்களின் வாடையே இருக்கவில்லை. எல்லோருமே வடமாநிலத்தவர்கள், காங்கிரஸ், பா.ஜ.க., திரிணாமுல் காங்கிரஸ் போன்றவற்றைச் சேர்ந்தவர்கள். இந்தக்குழுவின் பயண நோக்கம் உண்மையைக் கண்டறியும் பயணமோ அல்லது தமிழர்களின் நிலைமை அல்லது தமிழர்களின் உரிமைகள் குறித்து விசாரிப்பதோ அல்ல. இவர்களின் பயணத்தை ஒழுங்கு செய்தது இந்திய நாடாளுமன்ற வர்த்தகக் கைத்தொழில் கூட்டமைப்பு. இதற்கும் அரசியலுக்கு எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. எனினும் தற்போதைய சூழ்நிலையில் இந்தக் குழுவின் பயணம் தமிழ்நாட்டு மக்களின் கடுமையான வெறுப்புணர்வைச் சம்பாதிக்கும் என்றும் அதனைக் கைவிடுமாறும் மத்திய அமைச்சர் ஜெயந்து நடராஜன் கோரியிருந்தார். ஆனாலும், இந்திய வெளிவிவகார அமைச்சு இந்தப் பயணத்தை இடைநிறுத்த வேண்டாம் என்று ஆலோசனை கூறியது. இந்தக் குழு கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் பய ணம் மேற்கொண்டது. கிழக்கிற்கு செல்லவில்லை. அதேவேளை அலரிமாளிகைக்கும் செல்லவில்லை. பாதுகாப்புச் செயலர், அமைச்சர்கள் போன்றோரை சந்தித்திருந்தது.

### அலரிமாளிகைச் சந்திப்பு

போர்முடிந்து நான்கு ஆண்டுகளாகின்ற நிலையில் வந்த இந்தக்குழு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்காதமைக்கு ஒரு காரணத்தைக் கூறியுள்ளது. அவரைச் சந்தித்தால் புகைப்படம் எடுக்க வேண்டிவரும், அது தமிழர்களுக்கு மனக் காயத்தை ஏற்படுத்தும் என்பதால் சந்திப்பைத் தவிர்த்தோம் என திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் சௌகதா ராய் தெரிவித்துள்ளார். ஏனைய இரு குழுக்களிலும் தமிழர்கள் இருந்தனர். அவர்கள் அலரி மாளிகைக்குச் சென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தனர். இந்தக் குழுவில் தமிழர்கள் இல்லை. ஆனாலும் தமிழர்களின் உணர்வுகளைக் காயப்படுத்தக்கூடாது என்பதற்காக அவர்கள் அலரிமாளிகைச் சந்திப்பை தவிர்த்துள்ளனர். அதுமட்டுமல்ல, தமிழ் மக்களுக்கு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் என்று தான் நம்பவில்லை என்றும் கருத்து வெளியிட்டுள்ளார் திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் சௌகதா ராய்.

### வடக்கு- கிழக்கு அதிகாரங்கள்

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போது வடக்கு- கிழக்கிற்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவது பற்றி இந்தியக் குழுவினர் வினவியிருந்தனர். அதற்கு கோத்தபாய ராஜபக்ஷ, வடக்குக் கிழக்கிற்கு தனியான ஆட்சி முறை என்பது நடை முறைச் சாத்தியமற்றது என்று கூறியிருந்தார். அதுதான், தமிழர்களுக்கு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஒருபோதும் அதிகாரங்களை வழங்கப்போவதில்லை என்ற எண்ணத்தை இந்தக் குழுவினருக்கு ஏற்படுத்தியுள்ளது.

### இலங்கைக்கு வாருங்கள்

இலங்கைக்கு வாருங்கள். இங்குள்ள நிலைமைகளை வந்து பாருங்கள் என்று அழைப்பு விடுக்கும் அரசாங்கத்துக்கு இந்திய நாடாளுமன்றக் குழுவின் இந்தக் கருத்து நிச்சயம் எரிச்சலூட்டும். அதுவும் தமிழர்களின் பிரச்சினையை அதிகம் அறியாத, அதனுடன் அதிகம் தொடர்புபடாத வடமாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இந்தக் கருத்து ஏற்பட்டுள்ளது. நிச்சயமாக இது புதுடில்லியின் கவனத்தை ஈர்த்திருக்கும். இது எதிர்காலத்தில் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் புதுடில்லியின் போக்கில் மாற்றங்கள் உருவாகுவதற்கான அடிப் படையாக அமைந்தாலும் கூட ஆச்சரியமில்லை. ஏன் என்றால் தென்னிந்தியாவில் மட்டும் தான் இதுவரை இலங்கை அரசை



இனிமேல் நம்ப முடியாது என்ற கருத்து இருந்து வந்தது. இப்போது வட இந்தியாவுக்கும் இந்த உண்மை நன்றாகவே உறைக்கத் தொடங்கி விட்டது.

–இன்போ தமிழ்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நிலைமைகள் கவலையளிக்கின்றன

## பண்ருட்டி இராமச்சந்திரன்

(கொழும்பு) இலங்கைப் பிரச்சினை கவலையளிப்பதாக தே.மு.தி.க மூத்த தலைவர் பண்ருட்டி இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். தமிழக சட்ட சபையில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை இராமேஸ்வரம் மீனவர்கள் ஆனாலும் சரி இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை ஆனாலும் சரி அது மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டது. ஆனால் தமிழகத்துக்கு அதிகம் தாண்ட தாக்கம் உண்டு.

இந்தப்பிரச் சினைகளை தீர்க்கும் அதிகாரம் படைத்த மத்திய அரசு சுமுகமாக தீர்த்திருந்தால் தமிழ் நாட்டுக்கு இந்த தலைவிதி வந்திருக்காது.

இலங்கையில் போர் முடிந்த பின்னர் அங்குள்ள நிலைமை கவலை அளிக்கிறது. தமிழர் பகுதியில் இருந்து இராணுவத்தையாவது திரும்ப பெற்று இருப்பார்களேயானால் தமிழ் நாட்டில் இந்த அளவுக்கு ஏற்பட்ட கலக்கங்கள் தவிர்க்கப்பட்டு இருக்கும்.

இங்கு நடந்த மாணவர்கள் போராட்டத்தை பொலிஸார் திறமையாக சமாளித்தனர். மத்திய அரசும் இதில்பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (அ-2)

# இறந்தவர் உயிருடன் எழுந்தார்; மதுரையில் அதிசய சம்பவம்

(சென்னை) -மதுரை மாவட்டம் திருமங்கலம் பிரதேசத்தில் நபரொருவர் இறந்து விட்டதாக கருதப்பட்டுஉடலைமயானத்திற்குக்கொண்டு சென்று இறுதிச் சடங்குகள் செய்த வேளை உயிருடன் எழுந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருமங்கலம் அருகே உள்ள தும்மக்குண்டை சேர்ந்த ஒருவருக்கு கடந்த சில நாட்களுக்கு முன்பு திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

அதற்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி அவர் கடந்த திங்களன்று மதியம் இறந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து உறவினர்கள் அவரது உடலை சொந்த ஊருக்கு கொண்டு சென்று இறுதி சடங்கிற்கான ஏற்பாடுகளை செய்தனர். இறந்தவரின் உடல் ஊர்வலமாக மயானத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு உறவினர்கள், கட்சியினர் கலந்து கொண்டு அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்ட அவரது உடலை தகனம் செய்வதற்கு முன்பு இறுதிச் சடங்கின்படி இறந்தவரின் உடல் மீது தண்ணீர் ஊற்றப்பட்டது. இதன் போது அவரது உடல் அசைந்தது. சிறிது நேரத்தில் அவர் எழுந்து அமர்ந்தார். இதைப்பார்த்த அவரது உறவினர்கள் அங்கிருந்து அலறியடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்துள்ளனர்.

எனினும் அவரது மனைவி கணவர் உயிரோடு இருக்கிறார் என்று மிகவும் மகிழ்ச்சியடைந்து ஆனந்தக் கண்ணீர் வடித்தார். இதையடுத்து உயிருடன் எழுந்த நபரை உறவினர்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். இறந்து விட்டதாக தெரிவித்து மயானத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட உடல் உயிரோடு எழுந்து உட்கார்ந்தஅதிசயம் அப்பகுதியில்பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ-5)

# அரசாங்கம் பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் வழங்குகின்றது-சரத்

(கொழும்பு) -அரசாங்கம் பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் வழங்கி வருவதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் பயங்கரவாதிகளையும் பிரிவினைவாதிகளையும் தேர்தலில் போட்டியிட அரசு அனுமதித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தயா மாஸ்டர் போட்டியிடுவார் என்றதகவல் வெளியாகியுள்ளநிலையில் சரத் பொன்சேகா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாதிகளையும் குற்றவாளிகளையும் அரசாங்கம் தம் பக்கம் இணைத்துக் கொண்டு வருவதாகவும் குற்றவாளிகளுக்கு தண்டனை விதிக்கப்படுவதனை தடுக்கும் நோக்கில் இவ்வாறு செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதிக்ளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தி தண்டனை விதிக்காது அவர்களைப் பாதுகாத்து வருவதாகவும் முன்னாள் புலிகளின் தலைவர்களான பிள்ளையான், கருணா ஆகியோருக்கு அரசியல் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாகவும் தற்போது தயா மாஸ்டருக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இன்னும் சில காலங்களில் குமரன் பத்மநாதனுக்கும் அரசியலில் களமிறங்க அரசாங்கம் வழியமைக்கும் அல்லது தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்கும் எனவும் அவர் தெரி வித்துள்ளார். (அ-2)

# வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

(பூநகரி) இளைஞர் பாராளுமன்றத்துக்கான இரண்டாவது தேர்தல் எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இம்மாதம் 20 ஆம் திகதியில் இருந்து 30 ஆம் திகதி வரை பூநகரி பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட அலுவலகத்தால் தெரிவிக்கப்படுகிறது. இத்தேர்தலில் இளைஞர் கழக உறுப்பினர்களே வாக்களிக்க முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. (அ-84)

# இலங்கை குறித்த அமெ.வின் நிலைப்பாடு சமநிலையற்றது

## இலங்கை மத்திய வங்கி ஆளுநர் குற்றச்சாட்டு

இலங்கை தொடர்பான அமெரிக்காவின் வெளிநாட்டு கொள்கை சமநிலையற்று இருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் குற்றஞ்சாட்டியுள்ளார். போர்ப்ஸ் சஞ்சிகைக்கு அவர் எழுதியுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் சிறுபான்மை மக்களின் நல்லிணக்கம் தொடர்பில் அமெரிக்கா தொடர்ந்து இலங்கை மீது அழுத்தங்களைப்பிரயோகித்து வருகிறது. எனினும் மறு சீரமைப்பு விடயத்தில் ஏற்கனவே இலங்கை மேற்கொண்டுள்ள செயற்பாடுகள் தொடர்பில் அமெரிக்கா அவதானம் செலுத்த வில்லை.

இதேவேளை பொருளாதார ரீதியாக மிகவும்வேகமாக வளர்ந்துவரும் நாடு என்ற அடிப்படையில் இலங்கைக்கு அமெரிக்கா ஒத்துழைப்புகளை வழங்க மறுப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)




★1802-நெப்போலியன் பொனபார்ட் பிரெஞ்சுப் புரட்சியை அடுத்து நாட்டை விட்டு வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கினான்.

★1805-ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் லிபியாவின் டேர்ன் நகரைக் கைப்பற்றினர்.

★1865- அமெரிக்க உள்நாட்டுப் போர் ஜோசப் ஜோன்ஸ்டன் தலைமையில் கூட்டமைப்புப்படையினர் வட கரோலினாவின் டேர்ஹம் நகரில் கூட்டணியினரிடம் சரணடைந்தனர்.

★1865-அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனைக் கொலை செய்த ஜோன் பூத் என்பவனை கூட்டணிப் படைகள் சுட்டுக் கொன்றனர்.

★1937-ஸ்பானிய உள்நாட்டுப் போர் ஸ்பெயினின் கேர்னிக்கா நகரம் ஜேர்மனியினரின் குண்டுத்தாக்குதலுக்குள்ளானது.

★1945- இரண்டாம் உலகப் போர் நாசி ஜேர்மனியின் கடைசி வெற்றிகரமான தாக்குதல் போட்சன் என்ற இடத்தில் இடம்பெற்றது.

★1954-பிரெஞ்சு, இந்தோனேசியா மற்றும் வியட்நாமில் அமைதியை கொண்டு வரும் முகமாக ஜெனீவாவில் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

★1962- நாசாவின் ரேஞ்சர் 4 ஆளில்லா விண்கலம் சந்திரனில் மோதியது.

★1964- தங்கனீக்கா- சன்சிபார் இரண்டு நாடுகளும் இணைக்கப்பட்டு தான்சானியா என ஒரு நாடாகியது.

★1982- தென்கொரியாவில் முன்னாள் பொலிஸார் ஒருவர் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தியதில் 57 பொது மக்கள் உயிரிழந்துள்ளனர்.

★1986- உக்ரைனில் செர்னோபில் அணுமின் உலையில் பெரும் விபத்து ஏற்பட்டது.உலகின் மிகப்பெரும் அணுவுலை விபத்து இதுவாகும்.

★1994-ஜப்பானில் சீன விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 264 பேர் உயிரிழந்தனர்.

★1994- உச்சி குவார்க் (Top Quark) உப அணுத்துணிக்கை ஒன்றைத் தாம் அவதானித்ததாக இயற்பியலாளர்கள் அறிவித்துள்ளனர்.

★2005-29ஆம் ஆண்டு கால இராணுவ ஆக்கிரமிப்புக்குப் பின்னர் சிரியா தனது 14 ஆயிரம் இராணுவத்தினரை லெபனானில் இருந்து முற்றாக விலக்கிக் கொண்டது.

### பிறப்புகள்

★1564-வில்லியம்சேக்ஷ்பியர், ஆங்கில எழுத்தாளர் (இ.1616)

★1762- சியாமா சாஸ்திரிகள், கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவர் (இ.1827)

★1906- ஜி. பட்டு ஐயர், திரைப்பட நடிகர், இயக்குளர்.

### இறப்புகள்

★1920-சிறீனிவாச இராமானுஜன், கணித மேதை (பி.1887)

★1897-பெ.சுந்தரம்பிள்ளை, மனோன் மணீயம் என்ற நாடக நூலைப் படைத்த தமிழறிஞர் (பி.1855)

★1977- எஸ்.ஜே.வி. செல்வநாயகம், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் (பி.1898)

### எஸ்.ஜே.வி.செல்வநாயகம்



இன்று இவரது 36 ஆவது நினைவு தினமாகும். யாழ்ப்பாண மாவட்டம் தெல்லிப்பழை தொல்புரத்தைச் சேர்ந்த செல்வநாயகம் மலேசியாவில் 1898 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி பிறந்தார் . செல்வநாயகம் கல்வி கற்பதற்காகவே மலேசியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்தார்.

இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக சுவட்டாட்சி அரசியல் முறையை வற்புறுத்தினார். செல்வநாயகம் காங்கேசன்துறை நாடாளுமன்றத் தொகுதியில் நீண்ட காலம் தொடர்ச்சியாக வெற்றி பெற்று வந்தது அவரது தலைமைத்துவத்தின் வெற்றிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

செல்வநாயகம் தமிழர் விடுதலைக்காக தமிழ் மக்கள் அமைதியாக தமது தாயகத்தில் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக இறுதி வரை ஒரு சத்தியாக்கிரகியாக ஊழலற்ற வாழ்க்கையைக் கடைப்பிடித்தார். அமரர் செல்வநாயகத்தின் தீர்க்க தரிசனமான பண்டா – செல்வா ஒப்பந்தத்தையோ அல்லது பண்டா –டட்லி ஒப்பந்தத்தையோ மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் நிறைவேற்றி இருந்தால் எத்தனை பொருள் இழப்புகள், உயிர்ச்சேதங்கள், அனர்த்தங்களை இந்த சிறிய நாடு எதிர்நோக்கி இருக்காது.

1977 ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி தமது 79 ஆவது வயதில் உயிரிழந்தார். அதற்கு முன்னர் அவர் கூறியது கடவுள் தான் இனி தமிழ் பேசும் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதே. தந்தையின் கூற்று எத்தனை தீர்க்க தரிசனமான கூற்று. அக்கூற்று நிதர்சனமான கூற்றாக இன்று மாறியிருப்பது தமிழ் பேசும் மக்களின் துரதிர்ஷ்டமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் திருமதி
## ஸ்ரீநகுலமீரா சிதம்பரநாதன்

அம்மா! அன்பின் மறுபெயரன்றோ
இங்கு நீங்கள் இல்லை
அனுபவிக்கிறோம் அதன் வலியை
வலி தந்த கண்ணீரில் விளைந்த
இதயப் பூக்களை
காணிக்கையாக்குகிறோம்
தங்களுக்கே அது சமர்ப்பணம்



திதி:
அபரபக்க பிரதமை

தோற்றம்:
16.05.1947

மறைவு:
21.04.2008

**கனத்த இதயத்துடன்:**
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

**உரும்பிராய் தெற்கு,**
**உரும்பிராய்.**

(2426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமையாளர் வழி வந்த அமரர் தர்மலிங்கத்திற்கு சிலை வைப்பு

இலங்கையர் எனும் பட்டப்பெயரினைஉடையஅமரர் வி. தர்மலிங்கத்தின் சிலை திறப்பு விழா நாளை சனிக்கிழமை யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது. அதனையொட்டி இக்கட்டுரை வெளியாகின்றது.

இவருக்கு ஏன் சிலை எடுத்தார்கள் என்ற வினாவை விட இவருக்கு ஏன் சிலை எடுக்கப் பெறவில்லை? என்ற வினாவே சிறப்பானது என்று ஓர் அறிஞர் கூறியது ஞாபகத்திற்கு வருகின்றது.

உடுவில் மானிப்பாய் தொகுதிகளின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான விஸ்வநாதர் தர்மலிங்கத்திற்கு (05.02.1918-02.09.1985) அவர் செய்த சமூக சேவைகள் கருதி ஏன் இவ்வளவு காலமும் சிலை எடுக்கப்பெறவில்லை என்ற வினா பலகாலம் இருந்து வந்தது.

ஆயினும் காலங்கடந்தாயினும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் இவருக்கு சில எடுத்திருப்பதானது பொருத்தமானதொரு இடத்திலிருந்து அவரது சிறப்பை எடுத்துக் கூறும் முயற்சி ஆரம்பிக்கப்பெற்றிருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

இந்த சிலையெடுப்பின் அவசியம் பற்றி எழுதிய வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மற்றும் இது பற்றிக் கூட்டங்களில் பேசியவர்கள், சிலை நிறுவப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்ட கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், கல்லூரிச் சமூகத்தினர் நிதியுதவியை வழங்கியதோடு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கான பெறுமதி வாய்ந்த பெரு நிலப்பரப்பையும் (25 ஏக்கர்) மனமுந்து அன்பளிப்பு செய்த அமரர் தர்மலிங்கத்தின் அரும் புதல்வர் திரு.த. சித்தார்த்தன், இவரது சகோதரி திருமதி. சித்திரலேகா இராமச்சந்திரன், அமரர் வி. தர்மலிங்கம், திருமதி சரஸ்வதி தர்மலிங்கம் ஆகியோர் கல்வியியற் கல்லூரிக் காணி யைத் தமது பெறாமகனுக்கு எழுதி வைத்துச் சென்ற டாக்டர் சின்னத்தம்பி சுப்பிரமணியம் (Provincial Surgeon) ஆகியோர் இவ் வேலையில் எமது கல்வியியற் கல்லூரிச் சமூகத்தின் பெருநன்றிக்குரியவர்ளாகின்றனர்.



அமரர் வி.தர்மலிங்கம் அவர்களது உருவச்சிலை நிறுவப் பெறுவதற்கான காணியை முன்னின்று அன்பளிப்புச் செய்தமை சித்தார்த்தன் தமது தந்தையாருக்குச் செய்த ஈடிணையற்ற பிதிர்க்கடன் என்று தெரிகின்றது.

'அன்னயாவினும் புண்ணியங்கோடி ஆங் கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்,' எனும் பாரதியின் பாவரிகளுடன் இவ்விடயத்தில் ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது பயன் தெரியும்.

இத்தகைய உயர்ந்த தர்மத்தைச் செய்வதற்கான உளத்தை சித்தார்த்தன் தமது தந்தையாரிடமிருந்துதான் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்று தெரிகின்றது. தமது சொந்தக் காணிகளை விற்றே, நிறைய தான தருமங்களைச் செய்த இலங்கையரண்னை என்று அன்புரிமையுடன் அழைக்கப்பெற்ற அமரர் வி.தர்மலிங்கம் உயர்ந்ததொரு கல்விப் பாரம்பரியத்தில் வந்தவர் என்ற உண்மை பலர் அறியாதது.

அமரர்தர்மலிங்கம் அவர்களின் கல்வியிற் பெரியோர்களான முன்னோர்கள், சுன் னாகம்- கந்தரோடை இருபாலை ஊர்களில் வாழ்ந்தவர்கள். இவர் தாயாரது இருபாலையூரிற் பிறந்து தந்தை யாரது கிராமமாகிய கந்தரோடையில் வாழ்ந்தவர். கந்தரோடையில் அமைந்துள்ள அவரது இல்லத்தின் பெயரே காமதேனு என்பதாகும். இவரின் தந்தையார் சின்னத்தம்பி விஸ் வநாதர் அமெரிக்க ஹவாட் பல்கலைக் கழக M.A. பட்டதாரி, தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித் தியம் பெற்றவர். கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.

தமிழ், சமஸ்கிருதம், சிங்களம், ஆங்கிலம் முதலான பன்மொழிப் பாண்டித்தியம் உள்ளவரும் கற்பிட்டி, முல்லைத்தீவு நீதிமன்றங்களில் மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிந்தவரும் பல வடமொழி நூல்களை மொழி பெயர்த்தவருமான சுன்னாகம் அ.நாகநாத பண்டிதர் (1814-1884) சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரித் ஸ்தாபகரும் முகாமையாளருமான அமரர் எல்.கந்தையா, உபாத்தியாயர் மற்றும் நாடளாவிய ரீதியில் 180 இற்கும் மேற்பட்ட சைவத் தமிழ்ப் பாடசாலைகளையும் திருநெல்வேலி சிறுவர் தர்ம இல்லத்தையும் ஆரம்பித்து நடத்திப் புகழ் பெற்ற சைவப்பெரியார், இந்துபோர்ட் சு.இராசரத்தினம் (1884-1970) ஆகியோர் இவரின் நெருங்கிய உறவினர்கள். இவரின் பெரிய தந்தையாரான அமரர் வைத்திய கலாநிதி சின்னத்தம்பி சுப்பிரமணியம் (1873-1964) நாடறிந்த பிரபல சத்திர சிகிச்சைநிபுணர்.இவர்சைவவித்தியாவிருத்திச் சங்கத்தில் தலைவராகவும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முகாமையாளராகவும் பணி புரிந்தவர்.

மேலும் அமரர் தர்மலிங்கத்தின் தாயார் வள்ளிப்பிள்ளை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் ஆசிரியராகிய இருபாலை சேனாதிராய முதலியார் (1750-1840) அவர்களின் வழிவந்த பெருமைக்குரியவர்.முதலியாரின் புத்திரனாகிய வைத்திலிங்கம், புத்திரி கதிராசி அம்மையார், இவரின் பூட்டியாரென்றால் இவரின் கல்விப் பாரம்பரிய மகத்துவத்தை இதற்குமேல் விளக்க வேண்டியதில்லை. இவ்வாறு பல சிறப்புக்களையுமுடைய அமரர் தர்மலிங்கம் கொழும்பு சட்டக்கல்லூரியிற் பயின்ற காலத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவுமிருந்த அமரர் அப்பாப்பிள்ளை தர்ம்லிங்கம் அவர்களுடன் இணைந்து அங்கே ஒரு தமிழ் மன்றத்தை உருவாக்கியவர். அம்மன்றம் இப்பொழும் சிறப்பாக இயங்கி வருகின்றது.

இவர் P.S. சுப்பிரமணியம் அவர்களுக்குப் பின்னர் ஸ்கந்தாவின் முகாமையாளராகப் பணியாற்றியவர். நாம் இளமைக் காலத்திலிருந்து இவரது காத்திரமான நல்ல தமிழ் உரைகளைக்கேட்டு பிற்காலத்தில் பேசக் கற்றுக்கொண்டோம் என்பதனையும் இவ்விடத்தில் குறிப்பிடவேண்டும்.இவரின் தமிழ்ப்புலமை பாரம்பரியமும் கல்வி மற்றும் சம தர்ம சிந்தனைகளும் சமூக சேவையும் பிறவும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நிறுவப்பெற்ற அவரது சிலைத்திறப்பு விழாவின் போது நினைவு கூரப்படுவதாக.

**முருகேசு கௌரிகாந்தன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.**

# நில அபகரிப்பை தடுப்பதற்கு மக்களே ஒன்றிணையுங்கள்!

## வல்வெட்டித்துறை ந.சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்) தென்னிலங்கையில் ஏற்படும் ஆட்சி மாற்றம் தமிழர்களுக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத் தராது. எனவே தமிழர்களின் நிலங்கள் பறிக்கப்படுவதை எதிர்ப்பதற்காக பாராளுமன்ற ஆசனங்களை மறந்து போராட்டங்களில் ஈடுபடமுன்வர வேண்டும் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் அழைப்புவிடுத்துள்ளார்..

வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு ஆகிய பகுதிகள் உட்பட வடக்கில் தமிழர்களுக்குச் சொந்தமான காணிகளை இராணுவத்தேவைகளுக்காக சுவீகரிக்கும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதை எதிர்த்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக நேற்று முன்தினம் முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நடத்தப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர் தாயகப்பிரதேசங்களில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் இனஅழிப்பு நடவடிக்கைகள் முள்ளிவாய்க்காலுடன் முடியவில்லை. அவை தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

வெலியோயா, மண்கிண்டி மலை, யாழ். குடாநாட்டில் 6 ஆயிரத்து 381 ஏக்கர் நிலம் வலிகாமம் பகுதி எனத் தொடர்ந்து தமிழினத்தின் இருப்பு அழிக்கப்படுகின்றது.

இவ்வாறு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அபகரிப்பு மற்றும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த 200 பேர், 300 பேர் சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்துவதால் எந்தவித பயனுமில்லை.

பல்லாயிரக்கணக்கில் மக்கள் ஒன்று திரள வேண்டும். அரச அலுவலகங்களை ஸ்தம்பிக்க வைக்கும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொர்டுக்கும் போராட்டங்களாக அவை மாற வேண்டும்.

எனவே தமிழர் தாயகப் பகுதிகளில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவத்தின் காணி அபகரிப்புக்கு எதிராகப்போராட கட்சி பேதங்களை மறந்து, பாராளுமன்ற ஆசனங்களை மறந்து தமிழ்மக்களின் அரசியல் பிரதிநிதிகள் போராட முன்வரவேண்டும்.

சர்வதேசம் தடுக்கும் என்று நம்பிக் கொண்டிருப்பதில் பயனில்லை. ஜனநாயக வழியில் பாரிய போராட்டங்கள் வெடிக்கவேண்டும். அதனூடாகவே இவற்றைத் தடுத்து நிறுத்த முடியும்.

மாறாக தென்னிலங்கையில் ஏற்படும் ஆட்சிமாற்றம் தமிழர்களுக்கு தீர்வளிக்காது எனத் தெரிவித்ததோடு, தெல்லிப்பழையில் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் போராட்டத்திற்கு மக்கள் அணிதிரள வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

அத்தோடுதமிழர்களின் தாயக மண்ணை மீட்போம்; தாயகம் காப்போம்; மக்கள் அணி திரள்க! எனவும் அவர் அறைகூவல் விடுத்தார். (அ-6)

# அபிவிருத்தி சங்க நிர்வாகிகள் தெரிவு

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் இவ்வாண்டுக்கான பாடசாலை அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் கல்லூரியின் நாகேந்திரராஜா மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பதவி நிலைத் தலைவராக டிறிபேக் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன், செயலாளராக திருமதி. ராதிகா சுதாகரன், பொருளாளராக திருமதி . அருட் செல்வி சிவலோகராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் சார்பில் இருந்தும் 15 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-29)

# விசேட குளிரூட்டப்பட்ட இ.போ.ச.பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)இலங்கை போக்குவரத்துச் சபையினால் மக்களின் நன்மை கருதி விசேட சேவையாக குளிரூட்டப்பட்ட பேருந்து சேவை நடைபெற்று வருவதாக வடக்கு போக்குவரத்து சபை பிரதான முகாமையாளர் செ. அ. அஸ்கர் தெரிவித்துள்ளார்.

இச்சேவையானது புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து இரவு 8.30, 10 மணிக்கும் இரண்டு சேவைகளும் யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து இரவு 9.00, 10.00 மணிக்கு இரண்டு சேவைகளுமாக இடம்பெற்று வருகின்றன. இதற்கான ஒரு வழிக் கட்டணமாக 950 ரூபா அறிவிடப்படுவதுடன் ஆசனப் பதிவுகளை யாழ். மத்திய பேருந்து நிலையத்திலும் கொழும்பு மத்திய பேருந்துநிலையத்திலும் மேற்கொள்ள முடியும்.

பொது மக்களது நன்மை கருதி இச்சேவை வெள்ளவத்தை வரை நீடிக்கப்படவுள்ளது. அத்துடன் வெள்ளவத்தையில் ஆசனப்பதிவு செய்வதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றார். (அ)

# நீ.சேவை ஆ.குழுவினால் நீதவான்களுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நீதிவான் நீதிமன்ற நீதிபதிகள் பலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வருடாந்த இடமாற்றம் என்ற அடிப்படையில் எதிர்வரும் மே 2 ஆம் திகதி முதல் இந்த இடமாற்றம் இடம்பெறவுள்ளதாகவும் நீதிச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கமைய மன்னார் நீதவான் ஏ.பீ.யூட்சன் கல்முனை நீதவான் நீதிமன்றத்திற்கும் கல்முனை நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.எம். றிஸ்வான், வாழைச்சேனை நீதவான் நீதிமன்றத்திற்கும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

மேலும் சம்மாந்துறை நீதவான் செல்வி ஏ.கனகரட்னம் மன்னார் நீதவான் நீதிமன்றத்திற்கும் மட்டக்களப்பு மேலதிக நீதவான் கே. கருணாகரன் சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்திற்கும் வாழைச்சேனை நீதவான் எம்.ஏ.றியால் மட்டக்களப்பு மேலதிக நீதவானாகவும் இடமாற்றப்பட்டுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி க.பொ.த.(சா/த)-2012 பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரி கடந்த பல வருடங்களாகக் கா.பொ.சா/தரப் பரீட்சையில் தேசிய ரீதியிலும், வடபகுதியிலும் உயர் பெறுபேற்றைப் பெற்றுவரும் பாடசாலை யாகும். எனினும் அதிபர், ஆசிரியர்கள், கல்விச் சமூகம் இக்கல்லூரியின் பெறுபேறுகள் உச்ச நிலையில் இருந்தால்தான் மன நிறைவு பெறும். ஒரு சில பாடங்களில் குறிப்பாகக் கணித பாடத்தில் ஒரிருவர் சித்தியடைச் செய்யுத் தவறும் நிலையில் ஏனைய பெறுபேறுகள் என்ன நிலையில் இருந்தா லும் திருப்தி காண மாட்டார்கள். இம்முறை கணித பாடத்தில் 162 பேர் A எடுத்தும் 220 பேர் C யும் அத ற்கு மேல் பெறுபேறுகள் பெற்றிருந்த போதும் 3 பேர் கணித பாடத்தில் சித்தி பெறா தது கவலைக்குரியதாகவுள்ளது. கணித பாரம் பரியத்தை வளர்த்த கல்லூரியாக இருப்ப தால் சிறு பின்னடைவையும் ஏற்கும் மனநிலை இல்லை.

2012 இல் இக்கல்லூரியிலிருந்து க.பொ.த.சா/தரப் பரீட்சைக்கு 240 பேர் விண்ணப்பித்து 239 பேர் பரீட்சைக்கு தோற்றினர். இவர்களுள் தமிழ் மொழி மூலம் 197 பேரும் இருமொழிகள் (தமிழ், ஆங்கிலம்) மூலம்42 பேரும் பரீட்சைக்குத் தோற்றினர். 232 பரிட்சார்த்திகள் தலா 9 பாடங்கள் அடிப்படையில் (232X9)2151 பாட அலகுகளுக்குத் தோற்றியிருந்தனர். இவற்றுள் 2 பாட அலகுகளின் பெறுபேறுகள் கிடைக்கப்பெறவில்லை. இதனால் 2149 பாடஅலகுகளில் பெறுபேறுகள் மாத்திரமே இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

அட்டவணை 1 மொழிகள் அடிப் படையிலும் முழுமையாகவும் தர அடிப்படையிலும் தர அடிப்படையில் பெறுபேறுகள் எண் ணிக்கை யிலும் வீதத்திலும் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 1

| தரம் | தமிழ் மொழி மூலம் | | இரு மொழிகள் மூலம் | | முழுமையாக | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | விகிதம் | எண்ணிக்கை | விகிதம் | எண்ணிக்கை | விகிதம் |
| A | 783 | 44.21 | 255 | 67.46 | 1038 | 48.30 |
| B | 401 | 22.64 | 78 | 20.63 | 479 | 22.29 |
| C | 414 | 23.38 | 32 | 8.47 | 446 | 20.75 |
| S | 145 | 8.19 | 12 | 3.18 | 157 | 7.31 |
| W | 28 | 1.58 | 01 | 0.26 | 29 | 1.35 |
| | 1771 | 100 | 378 | 100 | 2149 | 100 |

2149 பாட அலகுகளில் 1038 அலகுகளில் பரீட்சார்த்திகள் A சித்தி பெற்றுள்ளனர். சராசரியாகப் பரீடசார்த்தி ஒருவர் 4 Aகளுக்கு மேல் பெற்றுள்ளார். மேலும் 1963 அலகுகளில் C யும் அதற்கு மேல் தரங்களும் பெறப்பட்டுள்ளது. இத்தரவுகள் மூலம் சராசரியாக ஒரு பரீட்சார்த்தி 8 Cக்கு மேல் பெற்றிருப்பது தெரிய வருகின்றது. 157 அலகுகளில் மாத்திரம் S பெறப்பட்டுள்ளது. 29 அலகுகளில் பரீட்சார்த்திகள் சித்தி பெற தவறிவிட்டனர். இவ்வலகுகளில் 24 அலகுகள் கட்டாய பாடங்களைச் சேர்ந்தவையாக இருப்பது கவனிக்கத்தக்கது. (ஆங்கிலம் 13, கணிதம் 3, விஞ்ஞானம் 4, வரலாறு 4)

தமிழ் மொழி மூலப் பெறுபேறுகளுக்கும் இரு மொழி பெறுபேறுகளுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருப்பது அவதானிக்கத்தக்கது. தமிழ் மொழி மூலம் பரீட்சார்த்திகளின் A தர வீதம் 44.21 ஆக இருக்க இரு மொழி மூலம் பரீட்சார்திகளின் A சித்தி வீதம் 67.46 ஆக இருக்கின்றது. AB தரங்களைச் சேர்த்து நோக்கின் இரு மொழிப் பிரிவுகளின் சித்தி வீதம் 88.09 ஆக இருக்க தமிழ் மொழிப் பிரிவுகளின் சித்தி வீதம்66.85 ஆகவுள்ளது. இந்நிலையில் வேறுபாடு வீதம் 21.24 ஆகும். எனினும் A+B+C தரங்களை தொகுத்து நோக்கின் இரு மொழி பரீட்சார்த்திகளின் சித்தி வீதம் 96.53 ஆகவுள்ளது. தமிழ் மொழி பரீட்சார்த்திகள் வீதம் 90.23 ஆகவுள்ளது. இதன் வேறுபாடு 6.30 வீதமாகும். எனவே இங்கு இரு மொழி மூலப் பரீட்சார்திகளின் பெறுபேறு வீதம் உயர்வாகவுள்ளது.

அட்டவணைii இல் தரங்கள் அடிப் படையில் தரவுகள் தரப்பட்டுள்ளன.

9 A தரம் பெற்ற பரீட்சார்த்திகள் 18 பேரா கும். எனினும் 8 A தரம் பெற்ற 37 மொத்த எண்ணிக்கை 55 ஆகும். 8A பெற்றவர்களுள் பலர் ஆங்கில இலக்கியத்தில் A தரம் பெறத் தவறிவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அட்டவணை iii ல் பாட அடிப்படையில் தரவுகள் தரப்பட்டுள்ளன.

கட்டாய 6 பாடங்களின் பெறுபேறுகளை நோக்கின் சமய பாடத்தில் 3 பேர் B தரத்தையும் மிகுதிப் பேர் யாவரும் A தரம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழியில் யாவரும் சித்தி பெற்றுள்ளனர். 230 பேர் C யும் அதற்கு மேலுள்ள தரங்களை பெற்றிருப்பதும் மன நிறைவைத் தருகின்றது.

அட்டவணை 2

| தரம் | எண்ணிக்கை |
|---|---|
| 9A | 18 |
| 8A | 37 |
| 7A | 14 |
| 6A | 18 |
| 5A | 18 |
| 4A | 26 |
| ≤3A | 108 |

ஆங்கில மொழியில் 13 பேர் சித்தி பெறத் தவறிவிட்டனர். எனினும் 68 பேர் A தரமும் 194 பேர் Cயும் அதற்கு மேலுள்ள தரங்களையும் பெற்றுள்ளனர். இரு மொழி பரீட்சார்த்திகளுள் 78.57 வீதத்தினர் A தரம் பெற்றிருப்பது பாராட்டத்தக்கது. யாவரும் C யும் அதற்கு மேலுள்ள தரங்களையும் பெற்றுள்ளனர். கடந்த காலப் பெறுபேறுகளுடன் ஒப்பிடும் இடத்து வருடந் தோறும் ஆங்கில மொழி; பாடப் பெறுபேறுகள் முன்னேற்றம் கண்டு வருவது சிறப்பாகும். பல்கலைக்கழக அனுமதியில் பல துறைகளில் க.பொ.த உ/தர பெறுபேறுகளுடன் க.பொ.த சா/தரப் ஆங்கிலப் பாட சித்தி திறமை சித்தி அனுமதிக்கு நிபந்தனையாக உள்ளது. மேலும் பல்கலைக்கழகங்களில் கலைப்பீடம் தவிர்ந்த எனைய பீடங்களில் இன்று ஆங்கிலமொழிமூலப் போதனை இடம்பெறுவதால் ஆங்கிலப் பாட சித்தி உயர் கல்விக்கு பெரும் உறுதுணையா கும்.

கணிதத்தில் 239 பரிட்சார்த்திகளுள் 162 பேர் A தரம் பெற்றுள்ளனர். இரு மொழி மூலம் பரீட்சார்த்திகளுள் 42 பேரில் 35 பேர் A தரமும் சகலரும் Cயும் அதற்கு மேலும் பெற்றுள்ளனர். மூவர் கணிதத்தில் சித்தியடையாததால் க.பொ. த. உ/தர வகுப்பு அனுமதி 100% இல்லை .

வரலாற்றுப் பாடப் பெறுகள் கடந்த வருடங்களை விட இம்முறை உயர்வாகவிருப்பது குறிப்பிடத்தக்கது . 113 பேர்Aதரம் 219 பேர் C யும் அதற்கு மேலும் பெற்றுள்ளனர். வரலாறு கற்பித்தலில் சில முன்னேற்றகரமான செயற்பாடுகள் கைக்கொள்ளப் பட்டிருக்க வேண்டும் என எண்ணலாம். பொதுவாக தமிழ்ப் பரீட்சார்த்திகள் வரலாற்றுப் பாடத்தில் நல்ல பெறுபேறுகளை பெறுவது குறைவாக இருக்கும் நிலையில் இக்கல்லூரிப் பெறுபேறு சிறப்பாகவுள்ளது.

விஞ்ஞான பாடத்தின் பெறுபேறு 98.3 வீதமாக இருப்பதுடன் யாழ். வலயத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. 2011 இல் சித்தி வீதம் 97.84 ஆகும். மொத்தப் பரீட்சார்த்திகளுள் 203 பேர் Cயும் அதற்கு மேலும் பெற்று க.பொ.த உ/தரத்தில் உயிரியல் பிரிவைக் கற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

முதலாவது தொகுப்பு விருப்பு பாடங்கள் 13 இருப்பினும், 204 பேரும் வர்த்தகமும் கணக்கியலும் 32 பேர் புவியியலும் 2 பேர் குடியுரிமையும் ஆட்சியலும் விருப்பப் பாடங்களாக தெரிவு செய்துள்ளனர். இப்பிரிவில் ஒருவர் மாத் திரமே சித்தி பெறவில்லை. 32 பேர் புவியி யலும் 2 பேர் குடியுரிமையும் ஆட்சியியலையும் விருப்புப் பாடங்களாக தெரிவு செய் துள்ளனர். இப்பிரிவில் ஒருவர் மாத்திரம் சித்தி பெறவில்லை. 30 பேர் S தரமும் தரமும் ஏனையவர்கள் Cயும் அதற்கு மேலும் பெற் றுள்ளனர்.

இரண்டாவது தொகுதி விருப்புப் பாடங்கள் 13 இருப்பினும் 5 பாடங்களுக்கு மாணவர்கள் தோற்றியுள்ளனர். மிகக் கூடுதலான மாணவர்கள் தமிழ் இலக்கியம்(99), நாடகமும் அரங்கிய லும் (83), ஆங்கிலம் இலக்கியம் (30) கர் நாடக சங்கீதம் (20), சித்திரம் (8) ஆகிய பாடங்களுக்கு தோற்றியுள்ளனர். இவர்க ளுள் தமிழ்இலக்கியத்தில் மாத்திரமே இருவர் சித்தியடையவில்லை. ஆங்கில இலக்கியத் தில் சகலரும் சித்தி பெற்ற போதும் இருவர் மாத்திரமே A தரம் பெற்றுள்ளனர். தமிழ் ஆங்கிலம்தவிர எந்த மொழிகளுக்கும் ஒரு மாணவனும் தோற்றவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

மூன்றாவது தொகுதி விருப்புப் பாடங்கள் 11 இருப்பினும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (113), விவசாயமும் உணவு தொழில்நுட்பம் (30) சுகாதாரமும் உடற்கல்வியும் (87) பேர் ஆகிய பாடங்களுக்கு தோற்றியுள்ளனர். தகவல் தொடர்பாடல் பாடத்தில் ஒருவர் சித்தி பெறுவார் எனினும் பெறுபேறுகள் உயர்வாக உள்ளன.தொகுத்து நோக்கின் இக்கல்லூரியின் 2012 க.பொ.த சா/தரப் பெறுபேறுகள் சிறப் பாகவுள்ளன. தேசிய மட்டத்தில் 10 ஆம் இடத்தையும் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுள் 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளது. எனினும் தேசிய நிலையில் முன்னேற்றம் காணவேண்டும் என்பது எமது பிரதேச மக்களின் விருப்பம்.

கொழும்பு ஆனந்தா கல்லூரி, காலி றிச்மண்ட் கல்லூரி, கொழும்புறோயல் கல்லூரி, கொழும்பு விசாக்கா தேவிபாலிகா, காலி சங்கமித்தா போன்ற பிரபல கல்லூரிகளின் பெறுபேறுகளை விட உயர்வான பெறுபேறுகளை அடைய வேண்டும்.இலங்கையில் வடமாகாணம் கல்வி நிலையில் 9 ஆம் இடத்திலிருந்து 8 ஆம்இடத்தை அடைந்துள்ளது. தமிழ் மக்களின் கல்வி முன்னேற்றத்தில் கணித, விஞ்ஞானக் கல்வி மேம்பாடடைய யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரியின் பங்கும் பணியும் காத்திரமாக அமைய வேண்டும் என்பது மக்களின் விருப்பமாகும்.



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர்/
வாழ்நாள் பேராசிரியர்

அட்டவணை 3 **Subject Wise Performance G.C.E. (O/L) 2012 All Medium**

| NO | Subject | Subject No | Number Applied | | Number Sat | | A | | B | | C | | S | | W | | Pass | | 2011 pass % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Male | Female | Male | Female | Male | Female | Male | Female | Male | Female | Male | Female | Male | Female | No | % | |
| 1 | Buddhism | 11 | | | | | | | | | | | | | | | | | |
| 2 | Saivanery | 12 | 196 | - | 195 | - | 92 | - | 03 | - | - | - | - | - | - | - | 195 | 100 | 100 |
| 3 | Catholicism | 14 | | | | | | | | | | | | | | | | | |
| 4 | Christianity | 15 | 02 | - | 02 | - | 01 | - | 01 | | | | | | | | 02 | 100 | 100 |
| 5 | Islam | 16 | | | | | | | | | | | | | | | | | |
| 6 | SinhalaL&L | 21 | | | | | | | | | | | | | | | | | |
| 7 | Tamil L & L | 22 | 198 | - | 197 | - | 83 | - | 67 | - | 39 | - | 08 | - | - | - | 197 | 100 | 99.5 |
| 8 | English | 31 | 198 | - | 197 | - | 35 | - | 32 | - | 85 | - | 32 | - | 13 | - | 184 | 94 | 96 |
| 9 | Mathematics | 32 | 198 | - | 197 | - | 127 | - | 28 | - | 23 | - | 16 | - | 03 | - | 194 | 99 | 97 |
| 10 | History | 33 | 198 | - | 197 | - | 85 | - | 36 | - | 58 | - | 14 | | 04 | | 193 | 98 | 98 |
| 11 | Science | 34 | 198 | - | 197 | - | 61 | - | 47 | - | 55 | - | 30 | | 04 | | 193 | 98 | 98 |
| | 1stSubject Group | | | | | | | | | | | | | | | | | | |
| 12 | Business& Acc Study | 60 | 173 | - | 173 | - | 65 | - | 34 | - | 47 | - | 26 | | 01 | | 172 | 99.5 | 94 |
| 13 | Geography | 61 | 23 | - | 22 | - | 10 | - | 07 | - | 03 | - | 02 | | | | 22 | 100 | 100 |
| 14 | Citizenship Edu & Governance | 62 | 02 | - | 02 | - | 01 | - | - | - | 01 | - | - | - | - | - | 02 | 100 | 100 |
| 15 | Entrepreneurship Studies | 63 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 16 | Second Language(Sinhala) | 64 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 17 | Second Language(Tamil) | 65 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 18 | Pali | 66 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 19 | Sankrit | 67 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 20 | Franch | 68 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 21 | German | 69 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 22 | Hindi | 70 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 23 | Japanese | 71 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 24 | Arabic | 72 | - | - | - | | | | | | | | | | | | | | |
| | 2nd Subject Group | | | | | | | | | | | | | | | | | | |
| 25 | Music (Oriental) | 40 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 26 | Music (Western) | 41 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 27 | Music (Catnatic) | 42 | 20 | - | 20 | - | 12 | - | 05 | - | 02 | - | 01 | - | - | - | 20 | 100 | 100 |
| 28 | Art | 43 | 08 | - | 08 | - | 01 | - | 06 | - | - | - | 01 | - | - | - | 08 | 100 | 100 |
| 29 | Dance (Oriental) | 44 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 30 | Dance (Bharatha) | 45 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 31 | English Literary Texts | 46 | 07 | - | 07 | - | - | - | 04 | - | 03 | - | - | - | - | - | 07 | 00 | 100 |
| 32 | Sinhal Literary Texts | 47 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 33 | Tamil Liberary Texts | 48 | 87 | - | 87 | - | 21 | - | 35 | - | 26 | - | 03 | - | 02 | - | 85 | 98 | 97 |
| 34 | Arabic Liberary Texts | 49 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 35 | Drama& Theater (Sinhala) | 50 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 36 | Drama& Theater (Tamil) | 51 | 76 | - | 75 | - | 07 | - | 42 | - | 23 | - | 01 | - | - | - | 73 | 100 | 100 |
| 37 | Drama& Theater (English) | 52 | - | - | - | | | | | | | | | | | | | | |
| | 3rd Subject Group | | | | | | | | | | | | | | | | | | |
| 38 | Information&Communication Tech | 80 | 81 | - | 81 | - | 31 | | 20 | | 20 | | 09 | | 01 | | 80 | 99 | 96 |
| 39 | Agriculture& Food Technology | 81 | 31 | | 31 | | 14 | | 09 | | 07 | | 01 | - | - | | 31 | 100 | 100 |
| 40 | AFisheries& Food Technology | 82 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 41 | Design & Technology | 83 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 42 | Art & Crafts | 84 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 43 | Home Economics | 85 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 44 | Health & Physical Edu | 86 | 86 | - | 85 | | 37 | | 25 | | 22 | | 01 | | | | 85 | 100 | 100 |
| 44 | Communication & Media Studies | 87 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 46 | Electronic Writing& Shorthand(Sinhala) | 92 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 46 | Electronic Writing& Shorthand(Tamil) | 93 | - | - | - | | | | | | | | | | | | | | |
| 48 | Electronic Writing& Shorthand(English) | 94 | - | - | - | | | | | | | | | | | | | | |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொய்யால் கவரப்பட்டவன் மனம் நல்ல விடயங்களில் சுவை காணாது.
—ஹொரேஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஏனோ எனை எழுப்பலானாய்... வடக்கில் தேர்தல் வருவதனாலே!

இதோ! வடக்கு மாகாண சபைக்கான தேர்தல். 2013 செப்ரெம்பர் மாதம் தேர்தலை நடத்துவதென அரசு முடிவு செய்திருப்பதாக அறிவிப்பு.

தேர்தல் களத்தில் அரசியல் கட்சிகள் விழித்துக் கொள்வது வழக்கம். இந்த விழிப்பையும் தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் தயார் செய்வதையும் நாடகமாக்கினால் எப்படியிருக்கும்?

இப்படியொரு கற்பனை நாடகம்.

**அறிவிப்பாளர்:** இதோ வடக்கு மாகாண சபைத் தேர்தல் நாடகம் அரங்கேறுகிறது. தேர்தல் நாடகத்தை பார்க்கவும் கேட்கவும் ரசிக்கவும் இறுதியில் மதிப்பீட்டுப்புள்ளடிபோடவும் வாருங்கள். தமிழ்மக்களே!

(திரை விலகுகிறது)

**குழுப்பாட்டு**

தேர்தல்கள் வந்தன. கோழிகள் கூவின. அரசியல்வாதிகளே பள்ளி எழுந்தருளுமினே.

**கட்சித் தலைவர்:** ஏனோ! எனை எழுப்பலானாய்... எனக்கு அதனை உரைக்க வேண்டும் இசைந்து கேட்பேன் நானே!

**அரசியல்வாதி:** தங்களால் நான் அடைந்த பதவி மோகத்தாலே வந்து எழுப்பலானேன். அரசியல் லாபம் கிடைக்கும் என்பதாலே.

**கட்சித் தலைவர்:** எனதருமை அரசியல் அபிமானியே! நன்றி...நன்றி...

நீ என்னை எழுப்பாதிருந்தால் நானோ தேர்தலை அறியாமலே தூங்கியிருப்பேன்.

**அரசியல்வாதி:** ஆஹா... ஆஹா... (சிரிப்புடன்)

பாராளுமன்றத்திலும் உறங்குவதுதானே உங்களின் பணி. நாட்டில் என்ன நடக்கிறது! ஏது நடக்கிறது என்று தங்களுக்கு எதுவுமே தெரிவதில்லை.

**கட்சித் தலைவர்:** எனது சொந்த விடயத்தைப் பார்ப்பது, எனக்கென்று சொத்துச் சேர்ப்பது, பெமிட் வாகனத்தை விற்று பணத்தைப் பெறுவது இதெல்லாம் ஒழுங்காகச் செய்துள்ளேன்.

இதுதவிர இடையிடையே அறிக்கைகள், வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்கள், கண்டன ஊர்வலங்களில் பங்கேற்புக்கள், பசியாத நேரத்தில் உண்ணாநோன்புகள் இது போதாதா என்ன?

**அரசியல்வாதி:** ஐயா! நீங்கள் சொல்வது உங்களைப் பொறுத்தவரை சரியாக இருக்கலாம். நாங்கள் அரசியல் கதைப்பது எங்கள் வீட்டுப் பிரச்சினையல்ல. அது தமிழர்களின் பிரச்சினை என்பதை அடிக்கடி மறந்து விடுகிறீர்கள்.

**கட்சித்தலைவர்:** மறதி அரசியல்வாதிகளின் மூலமந்திரம். அதற்காக அரசியலைவிட்டு ஒதுங்கவா முடியும்? சரி இப்போது என்ன செய்ய வேண்டும்?

**அரசியல்வாதி:** வட பகுதிக்குச் செல்ல வேண்டும்; வேட்பாளர்களை தயார் செய்ய வேண்டும்.

**கட்சித் தலைவர்:** நாசமறுந்த தேர்தல் முறை. பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபையிலும் போட்டியிட்டு இரண்டு பதவிகளையும் வைத்திருக்கலாம் என்றிருந்தால் எவ்வளவு நல்லதாக இருந்திருக்கும்.

சரி பரவாயில்லை எங்கள் தமிழ் மக்களை ஏமாற்றுவதா கடினம். எல்லாம் வெல்லலாம்.

**அரசியல்வாதி:** எப்படி?

**கட்சித் தலைவர்:** எதற்கும் முதலில் இறை வணக்கம்... நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து... இறைவா! ஆடும் கூத்தா! உன் கூத்தால் உலகம் இயங்கலாம். என் திருக்கூத்தால் என் கட்சி பலம் பெறட்டும். வளம் பெறட்டும்.

நடராசப்பெருமானே நடனம் உன்னுடையதாகலாம். ஆனால் நடிப்பு என்னுடையதாக அருள்புரிக.

(இறைவணக்கத்தை அடுத்து) தேர்தல் மேடையில் உரை...

உண்ணாமல் உறங்காமல் தமிழ் மக்களுக்காக நாம்...

மீண்டும் போர் வெடிக்கும்...

பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு...

# நாட்டிலுள்ள அனைவரும் துன்பங்களில் துவழ்கின்றனர்

## மீட்சி தேவை-பிரியங்கர கோஸ்தா

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் ஆட்சியில் வட பகுதி மக்களைப் போன்றே நாட்டின் அனைத்துப் பாகத்திலுமுள்ள மக்களும் துன்பங்களை அனுபவிக்கின்றனர் என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய திட்ட இணைப்பாளர் பிரியங்கர கோஸ்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் அனைவரையும் இன, மத, மொழி ரீதியாக வேறுபடுத்திவிட முடியாது.

உங்களிற்கு வலி ஏற்படுகின்றபோது அது எங்களிற்கும் வலிக்கின்றது. நீங்கள் சந்தோசமாக இருக்கின்ற போது நாங்களும் சந்தோசமாக உள்ளோம்.

நாட்டிலுள்ள அனைவருமே தற்போது ஏழைகளாகவுள்ளனர். நாங்கள் ஏழைகளாக மாறவில்லை. மாற்றப்பட்டுள்ளோம்.

தற்போது எமது நாடு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது.

இராணுவத்தின் காணிக் கொள்ளை, கரையோரங்கள் 15 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு சுற்றுலா மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பாதுகாப்பினைக் காரணம் காட்டி காணிப் பறிப்பு, தென்னிலங்கை மக்களினை குடியேற்றுவதற்கான காணி அபகரிப்பு எனப் பல விதங்களில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பறிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றுக்கு எதிராக குரல் கொடுப்பதற்கு மக்களிடையே குழுக்களை உருவாக்கி மக்கள் சக்தியினை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

இதற்காக எமது அமைப்பு நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் செயல்பட்டு வருகின்றது.

நாங்கள் அமைதியாக உள்ளபோது எம்மைச் சுரண்ட முற்படுவார்கள். அடக்கு முறைக்கு எதிராக நாம் குரல் கொடுக்கும் போது அங்கே உரிமை வென்றெடுக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு, தெற்கு என்ற பிரிவில்லாமல் அனைவரும் சேர்ந்து குரலெழுப்பி உரிமையை வென்றெடுப்போம் என அவர் தெரிவித்தார். (செ-4)

## கணவனின் பிரிவால் மனைவி தற்கொலை முயற்சி

(கரவெட்டி)

கணவன் உயிரிழந்து இறுதிக்கிரியை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மனைவி கிணற்றினுள் பாய்ந்து தற்கொலை செய்ய முயன்றுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கணவனின் இறுதிக்கிரியை நடைபெற்று உடலம் எடுத்துச் செல்லும்போது அந்தச் சோகத்தைத் தாங்க முடியாத மனைவி அருகிலுள்ள தோட்டக் கிணற்றினுள் குதித்து தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

இதில் ரியால் மைக்கல் அன்ரனி யாழினி (வயது-21) என்பவரே கை, கால் முறிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-24)

## 40 மாணவர்கள் சென்னையில் கைது

சென்னையில் நடக்கும் ஐ.பி.எல் போட்டியில் மாணவர்கள் அனைவரும் தமிழீழ விடுதலை வேண்டும் என வாசகம் அடங்கிய சட்டையை அணிந்து கொண்டு உள்ளே செல்வதாக நேற்று திட்டமிட்டனர். அதற்கான ஒருங்கிணைப்பு வேலைகளையும் செய்திருந்தனர்.

ஆனால் மாணவர்களின் தொலைபேசி எண்ணை ஒட்டுக்கேட்ட காவல் துறை மாணவர்கள் கிரிக்கெட் திடலுக்கு அருகே வந்த போது 40 மாணவர்களைக் கைது செய்தது.

சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு கருதி மாணவர்களை கைது செய்ததாகக் கூறியுள்ளது காவல்துறை. கைது செய்த மாணவர்கள் எழும்பூர் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டனர்.

இதனால் நேற்று நடந்த சென்னை அணிக்கும் ஹைதராபாத் அணிக்கும் இடையிலான போட்டி முடிபடைந்த பின்னரே மாணவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். (செ-11)

# மின்தடை அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைக்காகவும் நாளை சனிக்கிழமை முதல் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணிவரை மின்வெட்டு அமுலில் இருக்குமென யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி நாளை சனிக்கிழமை வல்லிபுரம் பிரதேசம், மணற்காடு, குடத்தனை, அம்பன், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய் ஆகிய இடங்களிலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, செம்மணி பிரதேசம் ஆகிய இடங்களிலும்

எதிர்வரும் 29-ம் திகதி திங்கட்கிழமை மாலுசந்தி முதல் இரும்பு மதவடி, மடத்தடி வரையான பிரதேசங்களிலும்

மறுநாள் செவ்வாய்க்கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் சுப்பர்மடம் பிரதேசத்திலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-5)

## வெள்ளி நற்சிந்தனை

121

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

திருநீறு அணிதல் வழிபாட்டு நடைமுறையில் சிறப்பாகப் பேணப்பட்டு வருகிறது. சைவசமய நடைமுறைகளில் திருநீறு ஒரு சமயச் சின்னமாகவும் விளங்குகிறது. திருநீறு விபூதி எனவும் அழைக்கப்படுகிறது. கிறிஸ்தவ வழிபாட்டு நடைமுறையிலும் விபூதித்திருநாள் என ஒருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது. இன்றைய இளந்தலை முறையினருக்குத் திருநீறு அணிதல் ஒரு விளையாட்டாகவே உள்ளது. ஆனால் இந் நடைமுறை மனித வாழ்வியலில் உடல் நலத்துடன் தொடர்புட்டிருந்தமை நினைவு கூரப்படவேண்டியது. இன்று நீராடிய பின் உடலின் ஈரலிப்பைப் போக்குவதற்குப் பல்வேறு நறுமணப்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. பண்டைக் காலத்தில் திருநீறே பயன்பட்டது. நெற்றியில் நீராடியபின் நீறு தரித்தால் எதுவித நோயும் அணுகாது. தேவாரங்களிலே திருநீறு பணி தீர்க்கும் மருந்தாகப் பயன்பட்டமை பதிவு செய்யப்பட்டுள்ளது. **காண இனியது நீறு கவினைத் தருவது நீறு** எனச் சம்பந்தர் பாடிய திருநீற்றுப் பதிகத்திலே குறிப்பிட்டுள்ளார்.

மணிவாசகருடைய பாடல் ஒன்று இறைவனின் திருநீறணிந்த திருக்கோலத்தைப் பதிவு செய்துள்ளது.

**திருநீற்றை உத்தூளித்து ஒளிரும் வெண்மையனே**

திருவெண்ணீற்றைப் பரவ அணிந்து அதன் ஒளிவிளங்கும் வெண்ணிற முடையவனே! என இறைவனுடைய கோலத்தைச் சொற் சித்திரமாகக் காட்டியுள்ளார். திருநீறு இருவிதமாக அணியப்படும். மூன்று கீறுகளாக அணிவது திரிபுண்டரம் எனப்படும். பரவிப் பூசுதல் உத்தூளனம் எனப்பட்டது. திருநாவுக்கரசர் நீறுபூசிய இறைவன் திருக்கோலத்தைப் **பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்** எனப்பாடியுள்ளார். மணிவாசகர் அறிவொளியோடு வெண்ணீற்றின் ஒளியும் சேர்ந்து மிளிரும் நிறைவான இறைவன் திருக் கோலத்தை நேரிலே கண்டவர்.

மெய்யடியவர்களுக்கு இறைவன் எப்போதுமே அணித்தாக இருப்பான். ஏனையோருக்குத் தொலைவிலேயே இருப்பான். இன்னும் அவன் அறிவதற்கு அரியவன். பெண்தன்மையும் ஆண்தன்மையும் உடையவன். இது மணிவாசகர் கேள்வியுற்ற அர்த்தநாரீஸ்வர வடிவாகும். இன்னும் இறைவன் அலித்தன்மையுடையனென்றும் குறிப்பிட்டுள்ளார். சுந்தரரும் இக்கோலத்தை **பெண்ணோ பாணா வியாய்ப் பிறவாவுருவானவனே** என்று தாம் பாடிய ஒரு தேவாரத்திலே பதிவு செய்துள்ளார்.

மணிவாசகர் இறைவனிடம் கேட்கும் ஒரு கேள்வி நீத்தல் விண்ணப்பம் என்னும் பதிகத்திலுள்ள எல்லாப் பாடல்களிலும் ஒரு சிறப்புத் தொடராகவே அமைந்துள்ளது. **விட்டிடுதி கண்டாய்** என்னும் அத்தொடர் என்னைக் கைவிடுகின்றனையோ? என்ற கேள்வியாகவே உள்ளது. மணிவாசகர் மனதிலே இறை வழிபாடு பற்றிய ஒரு தெளிவு இருப்பதை இப்பாடல் உணர்த்தி நிற்கிறது. தனக்கும் மெய்யடியார்க்கும் உள்ள வேறுபாடு அவருக்குத் தெளிவாகத் தெரிகிறது. இதனை அண்மைநிலை, சேய்மைநிலை என்ற இரு நிலைகளால் விளக்கியுள்ளார். நாம் இறைவன் இருப்பிடம் அறியாதவர்களாய் இருக்கிறோம். எப்போதும் இறைநினைப்போடு வாழும் மெய்யடியார்களது உள்ளத்திலே இறைவன் மனமுவந்து வந்திருப்பான். இதுவே மணிவாசகர் கூறும் அண்மை நிலையாகும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

**ஒண்மையனே திருநீற்றை உத்தூளித்**
**தொளி மிளிரும்**
**வெண்மையனே விட்டிடுதி கண்டாய்**
**மெய்யடியவர்க்கு**
**அண்மையனே என்றுஞ் சேயாய்**
**பிறர்க்கறிதற் கரிதாம்**
**பெண்மையனே தொன்மையாண்**
**மையனே**
**அலிப் பெற்றியனே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சச்சின் சாதனையை முறியடிக்க அவரே மறுபிறப்பெடுக்கவேண்டும்'



– முன்னாள் அணித் தலைவர்

சச்சினின் சாதனையை முறியடிக்க வேண்டும் என்றால் அவரே மறு பிறவியெடுக்க வேண்டும் என்று முன்னாள் அணித் தலைவர் திலிப் வெங்சர்க்கார் தெரிவித்துள்ளார்.

டில்லியைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் சச்சினைப் பற்றி எழுதியுள்ள புத்தக வெளியீட்டு விழா மும்பையில் புதன்கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு வெங்சர்க்கார் உரையாற்றும்போது.


சச்சின் நீண்ட நாட்கள் விளையாட வாழ்த்துகள். வரும் நவம்பரில் இந்திய அணி தென் ஆபிரிக்கா செல்லவிருக்கிறது. அது கடினமான தொடராக இருக்கும்.

எனினும் அதில் விளையாடும் போது சச்சின் 200 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய முதல் வீரர் என்ற சாதனையை படைப்பார். அது மிகச்சிறந்த சாதனையாகும்.

சச்சின் சாதனையை யாரால் முறியடிக்க முடியும் என்று மக்கள் என்னிடம் கேட்கலாம். ஆனால் சச்சின் சாதனையை மற்றவர்களால் முறியடிக்க முடியும் என்று நினைக்கவில்லை.

சச்சீனுடைய சாதனையை முறியடிக்க வேண்டும் என்றால் சச்சினே மறு பிறப்பெடுக்க வேண்டும் என நினைக்கிறேன் என்றார்.

## வலிமையான அன்பு



இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் தனது 40 ஆவது பிறந்த தினத்தை நேற்று முன்தினம் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் கொண்டாடினார். மும்பை இந்தியன்ஸ் அணி நிர்வாகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த பிறந்தநாள் நிகழ்ச்சியில் கிரிக்கெட் வீரர்கள், ஐ.பி.எல். அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் என ஏராளமானோர் முன்னிலையில் சச்சின் கேக்கை வெட்டியதும், அவருடைய மனைவி அஞ்சலி, சச்சினுக்கு கேக் ஊட்டினார்.

## ஆட்ட நிர்ணயத்தை ஒழிப்பதற்கு பங்களிக்குமாறு வேண்டுகோள்

ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சல்மான் பட், முஹமட் அஷிப் மற்றும் முஹமட் ஆமிர் ஆகியோர் ரசிகர்களை தவறான வழியில் இட்டுச் செல்வதை நிறுத்த வேண்டும் என சர்வதேச கிரிக்கெட் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இதுபோன்ற செயற்பாடுகளைக் கைவிட்டு, கிரிக்கெட் ஆட்ட நிர்ணயத்திற்கு எதிராக செயற்பட அவர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சர்வதேச கிரிக்கெட் பேரவையின் பிரதம நிறைவேற்று அதிகாரி டேவ் ரிச்சட்சன் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் ஆதரவாளர்களை பிழையான வழியில் இட்டுச் செல்லும் வகையிலான தகவல்களை வெளியிட வேண்டாம் என்றும் அவர் கோரியுள்ளார்.

ஆட்டநிர்ணயம் தொடர்பில் தங்களுக்கு தெரிந்த முக்கிய தகவல்களை வெளியிட்டு கிரிக்கெட்டில் இடம்பெற்றுவரும் ஆட்டநிர்ணயங்களை ஒழிப்பதற்கு பங்களிக்குமாறும் சர்வதேச கிரிக்கெட் பேரவை, குறித்த மூன்று வீரர்களையும் கேட்டுக்கொண்டுள்ளது.

## போராட்டம்

இலங்கை வீரர் சங்கக்காரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐதராபாத்தில் நேற்றுமுன்தினம் திடீர் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

ஐதராபாத்தில் ஐ.பி.எல். வீரர்கள் தங்கி இருக்கும் ஹொட்டல் முன் இந்த போராட்டம் நடைபெற்றது.

உடனடியாக அங்கு வந்த பொலிசார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அப்புறப்படுத்தினார்கள். போராட்டத்தில் ஈடுபட்டது எந்த அமைப்பு என்ற விபரம் தெரியவில்லை. இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

### இன்றைய ஆட்டம்


இரவு 8 மணி

Kolkata Knight Riders Vs Kings XI Punjab

## சாதனை தகர்ந்தது மகிழ்ச்சியளிக்கிறது – மெக்கலம்

பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் வீரர் கிறிஸ் கெய்ல் புனே வாரியர்சுக்கு எதிரான ஆட்டத்தில் 30 பந்துகளில் சதம் அடித்ததுடன், 17 சிக்சருடன் 175 ஓட்டங்கள் குவித்து புதிய உலக சாதனையும் படைத்தார். ஒட்டுமொத்த 20 ஓவர் போட்டியில் தனிநபர் அதிகபட்ச ஓட்டமாக இது பதிவானது. இதற்கு முன்பு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் வீரர் பிரன்டன் மெக்கல்லம் 2008ஆம் ஆண்டு ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 158 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது. அவரது சாதனையை கெய்ல் தகர்த்தார். இது குறித்து பிரன்டன் மெக்கலம் அளித்த பேட்டியில் 'எல்லா சாதனைகளும் முறியடிக்கப்படக்கூடியது தான். எனது சாதனையை கெய்ல் தன்வசப்படுத்தியது மகிழ்ச்சி அளிக்கிறது. நான் பயிற்சியை முடித்துக் கொண்டு பஸ்சில் திரும்பி சென்று கொண்டிருந்த போது, அவரது ஆட்டத்தை பார்த்தேன். இது நம்ப முடியாத ஆட்டம். 20 ஓவர் கிரிக்கெட்டில் அவர் மிகவும் சக்தி வாய்ந்த துடுப்பாட்ட வீரர். இந்த சாதனைக்கு அவர் தகுதியானவர்' என்றார்.

## சட்ட நடவடிக்கையை கைவிட்டார் மெக்கலம்



நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஜான் பார்க்கருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் முடிவை இப்போதைய தலைவர் பிரண்டன் மெக்கலம் கைவிட்டார். மெக்கலம் தொடர்பாக தெரிவித்த கருத்துக்காக பார்க்கர் மன்னிப்பு கேட்டுக் கொண்டதை அடுத்து மெக்கலம் இந்த முடிவை எடுத்தார்.

நியூஸிலாந்து அணியின் தலைவராக இருந்த ரொஸ் டெய்லர், கடந்த ஆண்டு இறுதியில் நீக்கப்பட்டு, அவருக்கு பதிலாக மெக்கலம் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த மெக்கலம், டெய்லர் நீக்கப்படுவார் என்பதும், தனக்கு தலைமைப் பதவி கிடைக்கும் என்பதும் எனக்கு முன்னதாகவே தெரியாது. இது கிரிக்கெட் சபை நிர்வாகிகளின் முடிவு என்று கருத்து தெரிவித்திருந்தார். ஆனால், இதற்கு எதிராக கருத்து கூறிய பார்க்கர், ரொஸ் டெய்லர் நீக்கப்படுவார் என்பது மெக்கலத்துக்கு முன்பே தெரியும். ஆனால் அவர் தனக்கு எதுவுமே தெரியாது என்பதுபோல பேசி வருகிறார் என்று கருத்துத் தெரிவித்தார்.

இதையடுத்து தனக்கு எதிராக அவதூறு பரப்பியதாக பார்க்கர் மீது வழக்குத் தொடர இருப்பதாக மெக்கலம் அறிவித்தார். ஆனால், தனது கருத்துக்காக பார்க்கர் மன்னிப்புக்கேட்டுக் கொண்டதை அடுத்து சட்ட நடவடிக்கை எடுக்கும் முடிவை மெக்கல்லம் கைவிட்டார். ஐபிஎல் போட்டியில் பங்கேற்றுள்ள மெக்கலம், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இடம்பெற்றுள்ளார்.

## ஐ.பி.எல்.அணிகள் பெற்ற புள்ளிகள்

IPL - 2013

| Teams | Mat | Won | Lost | Tied | Pts | Net RR |
|---|---|---|---|---|---|---|
| Bangalore | 8 | 6 | 2 | 0 | 12 | +1.25 |
| Chennai | 7 | 5 | 2 | 0 | 10 | +0.65 |
| Hyderabad | 7 | 5 | 2 | 0 | 10 | -0.10 |
| Rajasthan | 7 | 4 | 3 | 0 | 8 | +0.59 |
| Punjab | 7 | 4 | 3 | 0 | 8 | +0.34 |
| Mumbai | 7 | 4 | 3 | 0 | 8 | -0.14 |
| Kolkata | 7 | 2 | 5 | 0 | 4 | -0.01 |
| Pune | 8 | 2 | 6 | 0 | 4 | -1.47 |
| Delhi | 8 | 1 | 7 | 0 | 2 | -0.95 |

## ஆஷஷ் தொடருக்கான ஆஸி. அணி

இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள இவ்வாண்டுக்கான ஆஷஷ் தொடருக்கான அவுஸ்திரேலிய குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. 16 பேர் கொண்ட குழாமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு இரண்டு ஆஷஷ் தொடர்கள் இடம்பெறவுள்ள நிலையில், முதலாவது ஆஷஷ் தொடர் ஜூலை 10ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பிக்கவுள்ளது.

இத்தொடருக்கான குழாமினையே அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. மைக்கல கிளார்க் தலைமையில் இந்தக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாமின் உப தலைவராகவும், முதற்தெரிவு விக்கெட் காப்பாளராகவும் பிரட் ஹடின் அறிவிக்கப்பட்டுள்ளார். உப தலைவராகப் பதவி வகித்த ஷேன் வொற்சன் அப்பதவியிலிருந்து விலகியதையடுத்தே பிரட் ஹடின் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

புதுமுக வீரராக இடதுகை வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஃபோள்க்னர் சேர்க்கப்பட்டுள்ளதோடு, காயமடைந்திருந்த றயன் ஹரிஸ், ஜக்ஸன் பேர்ட் ஆகிய வேகப்பந்து வீச்சாளர்களும் இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளனர். தவிர, 2008ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய சார்பாக ஒரேயொரு டெஸ்ட் போட்டியில் பங்குபற்றிய பின்னர் அணியில் சேர்க்கப்பட்டிருக்காத கிறிஸ் றொகர்ஸ் என்ற துடுப்பாட்ட வீரரும் இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.


**அவுஸ்திரேலியக் குழாம்:** மைக்கல் கிளார்க், பிரட் ஹடின், டேவிட் வோணர், எட் கொவான், பிலிப் ஹியூஸ், ஷேன் வொற்சன், உஸ்மான் கவாஜா, கிறிஸ் றொகர்ஸ், மத்தியூ வேட், ஜேம்ஸ் ஃபோள்க்னர், றயன் ஹரிஸ், பீற்றர் சிடில், ஜேம்ஸ் பற்றின்சன், மிற்சல் ஸ்ராக், நேதன் லையன், ஜக்ஸன் பேர்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டி

# தோனி அதிரடி; சென்னை வெற்றி




மகேந்திரசிங் தோனியின் அதிரடி ஆட்டத்தினால் சன்ரைசர்ஸுக்கு எதிரான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 2 பந்துகள் மீதமிருக்கையில் 5 விக்கெட்டுக்களால் வாகை சூடியது.

6-வது ஐ.பி.எல்.தொடரின் 34-வது போட்டி சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் அரங்கில் நேற்றிரவு நடைபெற்றது.

இப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை சந்தித்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சன்ரைசர்ஸ் முதலில் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தது.

அந்த அணியின் சார்பில் ஆரம்ப வீரர்களாக குயின்ரன் டி ஹொக் - ஷிகர் தவான் ஆகியோர் களமிறங்கினர்.

எனினும் இந்த ஜோடி நிலைத்து நிற்க சென்னை பந்துவீச்சாளர்கள் இடம்கொடுக்கவில்லை.

டி ஹொக் 4 ஓட்டங்களில் மோகித் சர்மாவால் வெளியேற்றப்பட்டார்.

தொடர்ந்து வந்த வீரர்களும் பிரகாசிக்காமல் போக சன்ரைசர்ஸ் அணி தடுமாற்றத்தைச் சந்தித்தது.

இந்தவேளையில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த தவானும் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்களை எடுத்திருந்தபோது காயம் காரணமாக வெளியேற நிலைமை இன்னமும் சிக்கலானது.

பின்னர் காயத்திலிருந்து மீண்டும் துடுப்பாட வந்த தவானுடன் இணைந்த ஆஷிஸ் ரெட்டி அதிரடியாக ஆடினார்.

இவர்கள் இருவரது இறுதி நேர அதிரடித் துடுப்பாட்டத்தின் காரணமாக சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 20 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்கள் என்ற ஸ்திரமான இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் தவான் 45 பந்துகளில் 10 பவுண்டரிகள் அடங்கலாக 63, ஆஷிஸ் ரெட்டி 16 பந்துகளில் 2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 36 ஓட்டங்களையும் எடுத்தனர்.

சென்னையின் பந்துவீச்சில் பிராவோ, மோகித் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

160 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சென்னை அணிக்கு ஹசியின் அதிரடி ஆரம்பமும், தோனியின் இறுதி நேர அதிரடியும் இணைந்து அணியை 2 பந்துகள் மீதமிருக்கையில் 5 விக்கெட்டுக்களால் வெற்றி இலக்கை அடைய வைத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக தோனி 37 பந்துகளில் 7 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக 67 ஓட்டங்களையும், மைக்கல் ஹசி 26 பந்துகளில் 5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 45 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி சார்பாக அமித் மிஷ்ரா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக சென்னையின் வெற்றிக்கு வித்திட்ட தோனி தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வெற்றியின் மூலம் கிடைத்த 2 புள்ளிகளுடன் தனது புள்ளிகள் கணக்கை 12 ஆக அதிகரித்துக் கொண்ட சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, நிகர ஓட்ட சராசரியின் அடிப்படையில் பெங்களூருவுக்கு அடுத்ததாக 2-ம் இடத்தில் காணப்படுகிறது.

## யாழ்.சென்றல் அணி காலிறுதிக்கு தெரிவு

கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சீ.சீ.சீ விளையாட்டுக் கழகம் வருடாவருடம் நடத்திவரும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் 2வது சுற்றில் 13வது போட்டி அண்மையில் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் யாழ்.சென்றல் அணி, கே.சீ.சீ.சீ அணியை ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்று கால் இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.சென்றல் அணி கே.சீ.சீ.சீ அணியை துடுப்பாட பணித்தது. கே.சீ.சீ.சீ 18.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 103 ஓட்டங்களை பெற்றது. பங்குஜன் 26 ஓட்டங்களையும், யசிந்தன்-5, சலிஸ்ரன்-2, றஜீவ்குமார், சுபாதீஸ் தவா-1 இலக்கினை கைப்பற்றினர். 104 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய யாழ். சென்றல் அணி 9 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பாலேந்திரா-30, யசிந்தன்-24, விஷ்ணு-18 ஓட்டங்களையும் பெற்றனர். நிரோஜன், பபிதரன் தலா 3 இலக்கையும், சிலோஜன் 2 இலக்கையும் பார்த்தீபன் 1 இலக்கையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற யாழ். சென்றல் அணி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெற இருக்கும் கால் இறுதிப் போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணியை எதிர்கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணி தெரிவுக்கு யாழ்.சென்றல் அணி 5 புள்ளிகளையும் கே.சீ.சீ.சீ அணி 1.9 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது.

## வருடாந்த விளையாட்டு விழா

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

முதல் நிகழ்வாக யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்க ஆதரவுடன் வலைப்பந்தாட்ட போட்டியும் ஞாயிற்றுக்கிழமை 5 பேர் 6 ஓவர்கள் கொண்ட ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நெல்லியடி துர்ஜா நகை மாளிகை உரிமையாளர் சே.அமலதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். (24)

## வடக்கு இரா...

அவர்கள் தமது சொந்த நிலங்களில் மீள் குடியேறுவது ஒன்றுதான்.

எனவே தமிழ் மக்களுடைய மீள்குடியேற்றத்தினை ஐக்கிய தேசியக் கட்சி வலியு றுத்த வேண்டும்.

இராணுவம் தற்போது இராணுவத்திற்கு ஏற்ற வேலைகளைப் பார்ப்பது இல்லை. தமிழ் மக்களை அடக்குமுறைக்குள் கொண்டு வருவதும், அரசியல் நடத்துவதும் , பிரசாரங்களை முன்னெடுப்பதும் தமக்கு தேவையாக தேர்தல் வேட்பாளர்களைத் தேடிப்பிடிப்பதும், அரசாங்கத்தினை விமர்சிப்பவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு அடிப்பது, உதைப்பது, கல்லெறிவது போன்ற செயற்பாடுகளிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பிட்டுச் செல்ல வேண்டுமானால் இலங்கை அரசாங்கத்தினைப் பொறுத்த வரையில் அரசியல் சக்தியாகவும், அரசியலைக் கொண்டு நடத்துகின்ற சக்தியாகவே இராணுவம் வடக்கில் செயற்பட்டு வருகின்றது. இவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இந்நிலையில் நீதியானதும் நியாயமானதுமாக வட மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது. அவ்வாறு வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமானால் சர்வதேசத்தின் கண்காணிப்பு இங்கு முழுமையாக இருக்க வேண்டும்.

அக் கண்காணிப்பு தேர்தல் நடைபெறுவதற்கு ஒருசில மாதங்களின் முன்னரில் இருந்தே வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அவ்வாறு ஒரு மாதகாலத்திற்குள் சர்வதேச கண்காணிப்பு இங்கு வந்தால் மட்டுமே அரச கட்சிகளைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (செ-6)

## வேண்டாம்...

நாடுகளின் ஏளனத்திற்கு ஆளாக நேரிடும் என்று சர்வதேச மனித உரிமை அமைப்பின் ஆசிய இயக்குநர் பிராட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

லண்டனில் இன்று பொதுநலவாய அமைச்சர்கள் செயலக கூட்டம் கூடி விவாதிக்கவுள்ள நிலையில், இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் சர்வதேச மனித உரிமை அமைப்பின் ஆசிய இயக்குநர் பிராட் அடம்ஸ் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடத்தப்பட்டால் அதனை புறக்கணிக்கப் போவதாக கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சனல் 4 வெளியிட்டுள்ள கொலைக்களங்கள் ஆவணப்பட தயாரிப்பாளரான காலம் மக்ரே அவர்கள், பொதுநலவாய நாடுகளின் தற்போதைய தலைவர் கமலேஷ் சர்மாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் பொதுநலவாயத்தின் உச்சி மாநாட்டை நடத்த வேண்டாம் என்றும், இலங்கையில் மனித உரிமை இன்னும் மேம்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். தனது டுவிட்டர் மற்றும் பேஸ்புக் ஊடாக அவர் நேற்று பாரிய விழிப்புணர்வு ஒன்றை ஏற்படுத்த கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என அறியப்படுகின்றது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர் பதவி சுழற்சி முறையில் மாற்றப்படுவது வழக்கம். அதன் தற்போதைய தலைவராக இந்திய இனத்தவரான கமலேஷ் சர்மா அவர்களே உள்ளார்.

அவரது மின்னஞ்சலுக்கு (asksharma@commonwelth.int) ஆயிரக்கணக்கான ஈமெயில்களை தமிழர்களும் மற்றும் வேற்றின மக்களும் அனுப்ப வேண்டும் என்று காலம் மக்ரே தனது டுவிட்டர் ஊடாகத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இன்று லண்டனில் நடைபெறவுள்ள கூட்டத்தில் பெரும் சர்ச்சை கிளம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கனடா போன்ற நாடுகள் இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்த இணக்கம் தெரிவிக்கவில்லை. எனினும் பிரித்தானியா இன்னும் மௌனம் சாதித்து வருகிறது.

இதனை கனடாவுடன் இணைந்து பிரித்தானியவும் எதிர்க்க வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கப்படுகிறது. லண்டனில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தை சனல் 4 உட்பட சில சர்வதேச தொலைக்காட்சிகள் நேரடியாக வீடியோ எடுத்து தமது செய்திகளில் இணைக்கவும் உள்ளதாக சில தகவல்கள் கசிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நேரத்தில் இலங்கையில் இம் மாநாட்டை நடத்தக்கூடாது என சில நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கவுள்ளன. அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் பிரித்தானிய தமிழர் பேரவையால் இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்களும் சிறந்த முதலீட்டாளராகலாம்"

பங்குச்சந்தை முதலீட்டாளர்களுக்கான

**பயிற்சிப்பட்டறை**

எதிர்வரும் 27.04.2013 சனிக்கிழமை (9.00-12.00)

இடம்: பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை -யாழ்ப்பாணம்.

தொடர்பு: 0777822014 www.cse.lk

# மனித உரிமை விவகாரம்...

இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், யுத்தம் முடிபடைந்துள்ள சூழ் நிலையில் இலங்கை அடைந்து வரும் துரித முன்னேற்றம் குறித்து கருத்துத் தெரிவித்த வியட்நாம் பிரதமர் போருக்குப்பின் அமைதியையும், சமாதானத்தையும் நோக்கி இலங்கை நகர்வதையிட்டு மகிழ்ச்சி வெளியிட்டார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் ஹக்கீம் நாட்டின் இறைமையையும் தன்னாதிக்கத்தையும், ஒருமைப் பாட்டையும்தக்கவைத்துக் கொண்டு இலங்கை நீண்ட கால அபிவிருத் தித்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகக் கூறினார்.

வியட்நாமும் தனது முழு எல்லைப் புறங்களையும் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு நாட்டை ஒற்றுமைப் படுத்தி இருப்பதையிட்டும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

தாமும் வியட்நாம் நீதியமைச்சரும் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை வெற்றிகரமாக செயல்படுத்துவதன் ஊடாக இரு நாடுகளுக்கு மிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தக் கூடியதாக இருக்குமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அத்துடன் இரு நாடுகளுக்கு மிடையில் வர்த்தக பொருளாதார முதலீடுகளை மேற்கொள்வதற்கான வழிவகைகளை கண்டறிந்து. அவற்றை சிறப்பாககையாள்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதையும் அமைச்சர் ஹக்கீம் பிரதமரிடம் சுட்டிக்காட்டினார்.

ஜெனீவாவில் இலங்கை முகம் கொடுக்க நேர்ந்த மனித உரிமை மீறல் பிரச்சினைத் தீர்மானங்கள் பற்றிக் குறிப்பிட்ட அமைச்சர் ஹக்கீம். அத்தீர்மானங்கள் இலங்கையை ஐ.நா. பொதுச் சபையிலும், பாதுகாப்புச் சபையிலும் சிக்கலுக்கும், இக்கட்டான நிலைமைக்கும் உள்ளாக்கும் நோக்கத்திலேயே கொண்டு வரப்பட்டதாகவும் கூறினார்.

இலங்கைக்கு கல்வி, கலாசாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் வியட்நாம் அரசு பெரிதும் ஒத்துழைக்கும் என்று பிரதமர் நகுயென் டான் டுங் உறுதியளித்தார்.

வியட்நாம் மக்கள் உயர் நீதிமன்றத்தின் பதில் நீதியரசரும் அங்குள்ள சட்டமன்றத்தின் தலைவரும் அமைச்சர் ஹக்கீமைச் சந்தித்து கலந்துரையாடினர்.

அமைச்சர் ஹக்கீம் ஹனோயிலுள்ள மறைந்த முன்னாள் ஜனாதிபதிஹோஷிமினின் நினைவுத்தூபிக்கும் மரியாதை செலுத்தினார்.

தமது ஐந்து நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் அமைச்சர் ஹக்கீம் நேற்று அதிகாலை நாடு திரும்பினார். (செ)

# ஊடகங்கள் இலங்கை...

கியமானதாக இருக்கும்.

இலங்கையிலும் ஊடகங்கள் இதில் முக்கிய பங்காற்றியதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

குறிப்பிட்ட வரையறைக்குள் அனேக விடயங்கள் குறித்து சார்க் நாடுகளிடையே கலந்தாலோசிக்க முடியும்.

ஆனால் மற்ற நாட்டு உள்விவகாரங்களில் தேவையின்றி தலையீடு செய்ய முடியாதென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சார்க் தகவல் நிலையம் ஏற்பாடு செய்திருந்த சமாதானத்தைக் கட்டி யெழுப்புதலும் மோதல் தீர்வில் ஊடகங்களின் பங்களிப்பும் என்ற தொனிப்பொருளிலான மாநாடு நேற்றுமுன்தினம் தாஜ் சமுத்ரா ஹோட்டலில் ஆரம்பமானது.

அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்த மா நாட்டில் சார்க் நாட்டு தூதுக் குழுவினர் பங்கேற்றனர். மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க பிரதான உரையாற்றினார்.

இந் நிகழ்வில் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல உரையாற்றுகையில்,

30வருடயுத்தம்முழுநாட்டையும் பாதித்தது. இத்தகைய மோசமான மோத லுக்கு உலகில் பல நாடுகள் முகம் கொடுத்தன. பயங் கரவாதத்திலிருந்து முழு நாட் டையும் மீட்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2006ஆம் ஆண்டு முடிபு செய் தார்.

பயங்கரவாதத்தை முடிபுக்குக் கொண்டுவரும் நம்பிக்கையும் பொறி முறையும் அவருக்கு இருந்தது. இந்த விடயத்தில் ஊடகங்களின் பங்கு பிரதானமானது என்பதால் அது குறித்து ஜனாதிபதி என்னுடன் ஆராய்ந்தார். ஊடகங்களை சரியாக கையாளாவிட்டால் யுத்தத்திற்கு முடிபு கட்டுவது கடினம் என்பதை ஜனாதிபதி அறிந்திருந்தார். அதன் படியே ஊடக மத்திய நிலையம் உருவாக்கப்பட்டது.

சார்க் நாடுகள் பூகோள ரீதியில் ஒன்றுபட்டு செயற்படுகின்ற னர். ஏனைய நாட்டு உள்விவகாரங்களில் தலையிடாது செயல்படுவதன் மூலம் எமக்கு தொடர்ந்து ஒன்றாக செயற்பட முடியும்.

சார்க்எனும்கட்டலுக்குசுழல்காற்று, பாரிய அலைகள் என எந்தச் சவால் வந்தாலும் ஒன்றுபட்டு செயல்படுவதன் மூலம் முகம் கொடுக்க முடியும். ஒருவருக்கு ஒருவர் தன்னிச்சையாக உதவலாம்.

எமக்கு ஒன்றுபட்டு செயற்படக் கூடிய பல விடயங்கள் உள்ளன. 30 வருட யுத்தத்தின் பின்னர், நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டது. சமாதானத்தை கட்டியெழுப்புதலும் மோதல் தீர்வில் ஊடகங்களின் பங்களிப்பும் என்ற தலைப்பில் ஆராய்வதற்கு இலங்கையைத்தவிர வேறு உகந்த நாடு இருக்க முடியாது.

சர்வதேச ஊடகங்கள் இலங்கையை கொலை பூமியாக காட்டின. ஆனால் இது அபிவிருத்தியின் பூமி. இவ்வாறான தவறான குற்றச் சாட்டுக்களை சார்க் நாடுகள் ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலம் தகுந்த பதில் அளிக்க முடியும் எனவும் ஹெகலிய மேலும் தெரிவித்தார். (செ-11)

**தேவை**

யாழ்ப்பாணம், வன்னியில் இயங்கும் வைத்திய நிலையத்திற்கு ஆட்கள் தேவையாகவுள்ளது.

- தாதிமார்கள் (பெண்கள்)
- சாரதி (5 வருட அனுபவமுள்ள தங்கி வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்)

தொடர்பு: 0777 750 391 (C-3110)

ஜேர்மன் செப்பர்ட் அல்ஷேசன் நாய்

**விற்பனைக்குண்டு**

தொடர்பு: 0727288795 (2453)

**A/L தமிழ்-புதிய பிரிவு**

2015 9மணி -10மணி
2014 10மணி-11மணி சனி, ஞா

நாக தமிழிந்திரன்

2013 Paper& Rev

சனி, ஞாயிறு 7.30 -9.00

வினா, விடைக் கையேடு இலவசம்

BEACON-யாழ். (2454)

# எந்தவொரு முடி...

பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஈ.பி.டி.பி. தனித்து போட்டியிடவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தது. அந்த செய்திகள் இங்குள்ள ஊடகங்களிலும் வெளியாகியிருந்தது. ஆனால் இதுரை வடக்கு மாகாண சபைத்தேர்தல் தொடர்பில் எந்தவொரு முடிபும் எடுக்கவில்லை என்றார். (செ-6)

# வடக்குத் தேர்...

பம் தெரிவித்திருப்பதாகவும் கூறிய அவர் அவர்களின் தீர்மானம் என்ன என்பது தெரியும் வரையில் இதனை உறுதிப்படுத்த முடியாதிருப்பதாகவும் தெரிவித்தார்.

இறுதிச்சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தயா மாஸ்டரும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் மொழிபெயர்ப்பாளராகிய ஜோர்ஜ் மாஸ்டரும் இராணுவத்தினரிடம் சரணடைந்து புலனாய்வு விசாரணைகளையடுத்து, நீதிமன்ற விசாரணைகளின் போது பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டிருந்தனர். அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் இரு ந்து செயற்படுகின்ற தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தில் அவர் பணியாற்றி வருகின்றார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷ அவர்கள் தயா மாஸ்டரைச் சந்தித்துப் பேசியிருந்ததாகவும் வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாகவே முக்கியமாகப் பேசப்பட் டதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. (செ-11)

# வடக்குத் தேர்தல்...

வருகைதந்திருந்தனர்.

இதன் போது யாழ்.ஊடக அமையத்தில் பத்திரிகையாளர் சந்திப் பொன்றினை நடத்தியிருந்தனர். இதன் போதே அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் மாகாண சபைகளுக்கான தேர்தல்கலை தனித் தனியாக உடைத்து நடத்தி வருகிறது.

ஏற்கெனவே 8 மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டுவிட்டது. தற்போது வடக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த தேர்தலுக்கு முன்பாக வடக்கு மாகாணத்திற்கு சிவில் சமூகம் சார்ந்த ஒரு வரை ஆளுநராக நியமிக்க வேண்டும்.

அத்தோடு பொலிஸ் ஆணைக் குழு, நீதி ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழுக்களையும் நியமிக்க வேண்டும்.

நேர்மையான தேர்தல் நடைபெற சர்வதேச கண்காணிப்பாளர்களும் வேண்டும். சுதந்திரமாக ஆணைக்குழுக்களை இயங்க விட்டு தேர்தலை நடத்த வேண்டும் எனவும் வேண்டு [illegible] (செ-6)

**டோஹா, கட்டாரில் (Doha,Qatar) உடனடி வேலைவாய்ப்பு**

பொறியியல், நிர்மாணத்துறையில் பிரசித்திபெற்ற நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் SLBFE அங்கிகரிக்கப்பட்ட Air Trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தினூடாக 30க்கும் அதிகமான வேலைவாய்ப்புக்கள் அதி உயர் சம்பளத்துடன் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.

மேசன் 1200 - 1500 எலக்ரீசியன் 1200 - 2000 பெயின்டர் 1200 - 1500 Plumber 1200 - 1500 கம்பி கூடுகட்டுபவர் - 1200 - 1500 காப்பென்டர்ஸ் 1200 - 1500 பொது உதவியாளர் 900 - 1000 லேபர் 900 - 1000 கிளினிங் லேபர் 800 - 1000 Mechanic 1200 - 2000 Mechanic Helper 1000 Driver (Valit License) 1500 - 2000 6 G Welder 1200 - 1500

மிக குறைந்த கட்டணத்தில் இரண்டே வாரத்தில் பயணமாகலாம். உங்கள் விண்ணப்பங்கள் பாஸ் போர்ட் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் எதிர்வரும் 27.04.2013 A9 வீதி, பரந்தன் ஸ்டார் ரெஸ்ட் இலும் 28ஆம் திகதி இல 33, ஆசீர்வாதம் லேன்ட் ஹொஸ்பிட்டல் வீதி, கிறின் கிறாஸ் ஹோட்டல்யாழ்ப்பாணத்திலும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். (L.L. No - 2490)

உடன் தொடர்புகளுக்கு : வவுனியாவில் T.P. : 0777 92 94 75, 077 23 93 165

தலைமை நிறுவனம் : Air Trust Overseas Manpower Consultant, 945, Maradana Road, Colombo - 8 011 2676777, 077 2393165 (C-3041)

# மரண அறிவித்தல்

## துரையப்பா நடராஜா (மெக்கானிக்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 25, நாவலர் வீதி, ஐந்து சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா நடராஜா (பிரபல்ய கார் மெக்கானிக்) 25.04.2013 மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா நீலாட்சியின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா மணியின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், முரளிதரன் (Murali Electronics) செம்மா தெரு ஒழுங்கை), சுதாகர்(ஜேர்மன்), பிரபாகர் (மெக்கானிக்-ஐந்து சந்தி), சதாரூபினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி நிர்மலா, றோகினி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவீனா, தர்ஷனா, லக்ஷன், விதுசன், நதிகா, மதுசா, யதுசன், விதுசா ஆகியோரின் அன்பு பேரனும், ஜெகதாம்பாள், மகேஸ்வரன் (ரிங்கர்), சந்தானலட்சுமி, கண்மணி ஆகியோரின் அன்பு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதி கிரிகைகள் 26.04.2013 இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

25,நாவலர் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

T.P.: 0770476212

தகவல்: குடும்பத்தினர் (2467)

**மானிப்பாய் ஆனைக்கோட்டையில் வைத்திய நிலையம்**

எமது வைத்திய நிலையம் 11.04.2013 வியாழக்கிழமை தொடக்கம் 04 ஆம் கட்டை, யாழ்.றோட் (புக்கை தின்னிப் பிள்ளையார் கோயிலடி) ஆனைக்கோட்டையில் மாற்றப்பட்டுள்ளது என்பதை மிகவும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**எமது சேவைகள்**

- சகலவிதமான நோய்களுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.
- இரத்தம், சிறுநீர் (ஆய்வுகூட சேவைகள்) நவீன முறையில் செய்து கொடுக்கப்படும்.
- விடுமுறையில் செல்பவர்களுக்கான வைத்தியச் சான்றிதழ் வழங்கப்படும்.

வைத்திய கலாநிதி சி.சிவானந்தராஜா MBBS (SL)

**தினமும் பார்வையிடும் நேரங்கள்**

காலை 08.30 மணிமுதல் - 1.00 வரை

மாலை 04.30 மணிமுதல் - 8.30 வரை

**கஜமுகன் வைத்திய நிலையம்**

04 ஆம் கட்டை,
(புக்கை தின்னி பிள்ளையார் கோயிலடி)
யாழ்.றோட். ஆனைக்கோட்டை. கூழாவடி. (சி-3109)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட்டு யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org